
# இறையியல் கோலங்கள்

வடிவம் 16 | மார்ச் 2003 | வண்ணம் 01

## போரில் ஒழுக்கவியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் கோலங்கள்

காலாண்டு வெளியீடு

# *Irai Iyal Kolangal*

Tamil Theological Quarterly

**Vol : 16**
**No : 01**
**March : 2003**

**வடிவம் : 16**
**வண்ணம் : 01**
**மார்ச் : 2003**

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்,
இலங்கை.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் :

அருள்திரு ஜே. நீக்கிலஸ்

துணை ஆசிரியர்கள் :

அருள்திரு ச.வீ.ப.மங்களராஜா

அருள்திரு ப.ஜோ.ஜெபரட்ணம்

நிர்வாகக் குழு :

சகோ.தா.நிருபன் நிஷானந்

சகோ.அ.அன்ரன் ஸ்ரீபன்

சகோ.பா.ஜோ.அன்ரனி பிறாயன்

சகோ.சூ.லக்கோன்ஸ் பிகிறாடோ

சகோ.செ.பிரான்சிஸ் அசிசி

சகோ.பி.தே.யூட்தாஸ்

வெளியீடு :

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி.

கொழும்புத்துறை, யாழ்ப்பாணம், இலங்கை.

**Editor:**

Fr. J. Nicholas

**Sub Editor:**

Fr. S.V.B. Mangalarajah

Fr. P.J. Jebaratnam

**Adminirtrative Board :**

Bro. T. Niruban Nishanand

Bro. A. Anton Stephen

Bro. B.J Antony Brian

Bro. S. Laconz Figurado

Bro. S. Francis Assisi

Bro. F.T. Judethas

**Publication :**

*St. Francis Xavier's Seminary,*

*Columbuthurai, Jaffna, Sri lanka.*

Tel. No: 021-2222482

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்

1. ஆசிரியரிடமிருந்து

2. உயிர்த்த கிறிஸ்துவின் சமாதானம்
அருட்சகோதரி லூமினா போல்ராஜா(தி.க)

3. நேரிய அல்லது நியாயமான போர்க்கோட்பாடு
அருட்திரு. ம. டேவிட்

4. யுத்தகாலத்தில் மதிக்கப்பட வேண்டிய மனிதஉரிமைகள்
அருட்திரு. இ. ஸ்ரலின்

5. சமாதானத்தில் மதங்களின் பங்கு
அருட்சகோதரன் பி. தே. யூட்தாஸ்

6. சமூக ஒப்பரவுப் பணியில் பொதுநிலையினர் (நேர்காணல்)
அருட்சகோதரன் இ. பெ. தயாபரன்

7. சிறுவரைப் பாதிக்கும் யுத்தம்
அருட்தந்தை A. I. பேனாட்

8. புனித அல்போன்ஸ் லிகோரியார்
அருட்சகோதரன் அ. கொன்பியூசியஸ்

9. Synopsis

10. குறுக்கெழுத்துப்போட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்



கடந்த பல வருடங்களாக எமது குருமடத்தின் அதிபராகவும் இறையியல் கோலங்கள் சஞ்சிகையின் ஆசிரியராகவும் இருந்து அரும்பணியாற்றி மாற்றலாகி யாழ் மறைமாவட்ட குருமுதல்வராக பணி யாற்றச் செல்லும் அருட்தந்தை நீக்கிலஸ் அடிகளாரை வாழ்த்தி நன்றி கூறுகின்றோம்.

அன்பும், கனிவும், பாசமும், நிறைந்த தந்தையவர்கள் எமது காலாண்டுச் சஞ்சிகையின் வளர்ச்சிக்கு நிறைவாக தனது நேரத்தையும் ஆற்றலையும் தியாகம் செய்திருக்கின்றார். நடப்புக் காலத்தின் சவால்களிற்கும் தேவைகளிற்கும் முகம் கொடுக்கத்தக்க வகையில் சஞ்சிகையின் தரத்தை உயர்த்தியுள்ளார். காலத்தின் தேவையறிந்து மக்களின் வாழ்க்கைத் தேடல்களிற்கு விடை கொடுக்கத்தக்கதான ஆக்கங்களை இச் சஞ்சிகை வழங்கவேண்டும் என்ற தணியாத விருப்புக்கொண்டவராக விளங்கிய தந்தை அவர்கள் இதிலே வெற்றியும் கண்டார்.

தந்தை அவர்களுக்கு நன்றி கூறுவதோடு அவரது எதிர்காலப்பணி சிறக்கவும் இறைவனின் அன்பும் அருளும் பராமரிப்பும் தொடர்ந்தும் நிறைவாகக் கிடைக்க இறையருள் வேண்டி வாழ்த்துகிறோம்.

நிர்வாகக் குழுவினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரிடமிருந்து.......

ஆண்டவரிடன் உயிர்ப்பு விழா நம் அனைவருக்கும் ஓர் சிறப்பு விழா. திருவழிபாட்டு ஆண்டில் மிகவும் முக்கியமான விழா. மீட்பு வரலாற்றில் கொடுமுடியாய் விளங்கும் விழா. மனுக்குலத்தை பாவத்தின் பிடியில் இருந்து விடுவித்த விழா. சாத்தானை தோற்கடித்த விழா மரணத்தை வென்றெடுத்த விழா. கிறிஸ்தவர்கள் அனைவரும் பெருமகிழ்ச்சியோடு கொண்டாடும் விழா.

இன்று உலகத்திலே இந்த உயிர்ப்பு விழா அர்த்தமுள்ளதாக மாற வேண்டும். போர் மேகங்கள் எங்கும் சூழ்ந்து நிற்கும் காலமிது ஆயுத உற்பத்தியும், யுத்த அச்சுறுத்தல்களும் நிறைந்து விளங்கும் காலமிது. அடக்கு முறைகளும் அடிமைத்தனங்களும் தலைவிரித்து நிற்கும் காலமிது சாதி, இன, மத வெறிகள் மலிந்துள்ள காலமிது. வறுமை, பசி, பிணி மக்களை வாட்டி வதைக்கும் காலமிது. சுயநலம், சுறண்டி வாழும் போக்கு, இலஞ்சம் வரதட்சனை போன்ற கொடுமைகள் வளர்ந்து வரும் காலம் இது. பல்வேறு அடிமைத் தனங்கள் மலையாய் உயர்ந்து நிற்கும் காலத்தில் கிறிஸ்துவின் உயிர்ப்பு விழா ஒரு சவாலை விடுக்கிறது.

சமாதானம், ஒழுக்கம் மனிதஉரிமை பேணல், ஒப்புரவு ஆகியவற்றிற்கு முன்னுரிமை கொடுத்து புதியதோர் சமுதாயத்தை கட்டியெழுப்புதல் இன்று அவசியமாய் உள்ளது. குறிப்பாக ஆசிய நாடுகளிலே முழு மனித விடுதலையை முதற் பணியாக கொண்டு கிறிஸ்து உலகிற்கு கொண்டு வந்த சமாதானம் அனைவருக்கும் கிடைக்க அர்ப்பணிப்போடு நாம் அனைவரும் உழைக்க வேண்டும் என இந்த உயிர்ப்பு விழா எம்மைத் தூண்டி நிற்கிறது. இந்த வகையில் தான் கிறிஸ்துவின் உயிர்ப்பு விழா எம் மத்தியில். அர்த்தம் பெற முடியும்.

அருட்திரு ஜே.நீக்கிலஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்த கிறிஸ்துவின் சமாதானம்

*அருட்சகோதரி லுமினா போல்ராஜ் (தி.க)*

## முன்னுரை:

இன்று நாம் வாழும் சமகால சூழலில்,குடும்பங்களில்,சமூகங்களில், திருச்சபையில், நாட்டில் ஏன் சர்வதேச அரங்கில் கூட எல்லோரும் ஏங்கித் தேடுகின்ற ஒன்றாகச் "சமாதானம்" என்ற தாகத்தின் தவிப்பு உருப்பெற்றிருக்கின்றது. இந்த எதிர்பார்ப்பின் எதிரொலிகள் பல கோணங்களில், வெளியாகும் செய்திகளில், உரையாடல்களில் சிறப்பாக ஊடகவியல் சாதனங்களில் வெளிக் கொணரப்படுகின்றது. இதே வேளை வீசத்தொடங்கியுள்ள "சமாதானம்" என்ற மெல்லிய தென்றல் புயலாக மாறிவிடுமோ? என்ற பயம் அங்கலாய்ப்பு எல்லோர் உள்ளங்களிலும் நிழலிடப்பட்டிருப்பதும் மறுக்க முடியாத உண்மையாகக் காணப்படுகின்றது.

இவ்விரு வேறுபட்ட நிலைகளுக்கிடையில் "உயிர்த்த கிறிஸ்து" தருகின்ற சமாதானமே நிலையான சமாதானம், ஒப்புரவின் சமாதானம், விடுதலையின் சமாதானம் - இதுவே நம் நம்பிக்கை,இதுவே நம் விசுவாசம் என்பதை விவிலிய ஆதாரங்கள் கோடிட்டுக் காட்டுகின்றன.

## இயேசு அளிக்கும் ஆசி – சமாதானம்:

கடவுள் தன்மையில் விளங்கிய இறைமகன் இயேசு மனுக்குலத்தை இறைத் தந்தையுடன் ஒப்புரவாக்க - படைப்பனைத்திற்கும் சமாதானத்தை அளிக்கும் நற்செய்தியாக வரலாற்றினுள் நுழைந்தார். இயேசுவின் மனுவுரு எடுப்பு "பூவுலகில் நல்மனம் உள்ளவர்க்கு அமைதி உண்டாகுக"*(லூக்2:14)* என்ற ஆசிநிறை, நிறை செய்தியை அளிப்பதைக் காண்கின்றோம்.தாம் தெரிந்தெடுத்த அப்போஸ்தலர்களைப் பணிக்கு அனுப்பும் போது அவர்களுக்கு கொடுத்த அன்பின் வேண்டுகோள் செல்லும் இடங்களில் எல்லாம் "சமாதானம்" *(மத்10:13)* என்ற ஆசீரை அளியுங்கள் என்பதாகும். தமது பகிரங்கப் பணியில் தம்மிடம் தேடி வந்த பாவிகள் உதாரணமாக பாவிப் பெண் தன் பாவம் நினைந்து கண்ணீர் சொரிந்து அழுதபோது "உமது நம்பிக்கை உம்மை மீட்டது அமைதியுடன் செல்க" (லூக்7:50) என்ற ஆசியையும் பெரும்பாடுள்ள நோயினால் வாடிய பெண்ணுக்கு "உனது நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று அமைதியுடன் போ நோய் நீங்கி நலமாயிரு" *(மாற்5:34), (லூக்8:48)* என்ற ஆசியையும், இன்னும் ஏழைகள், ஒடுக்கப்பட்டோர், துன்புறுத்தப்பட்டோர் அனைவர்க்கும் "சமாதானம்" என்ற நலமும், மகிழ்வும் நிறைந்த ஆசியை அள்ளி வழங்குவதையும் காண்கின்றோம். தம் இவ்வுலக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வின் வரலாற்றைக் கடந்து சாவே உன் வெற்றி எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கே? (1கொரி15:56) என்று பாவித்தின் மீதும்,சாவின் மீதும் வெற்றி கொண்ட உயிர்த்த இயேசுவாக, தம் அன்புச் சீடரை உறுதிப்படுத்த அவர்களுக்கு அருளிய இறுதி ஆசியும் சமாதானமே ஆகும். (லூக்24:36, யோவா 16:33: 20:19,26)

உயிர்த்த இயேசு தரும் சமாதானத்தைப் பற்றி இயேசுவோடு மிக நெருக்கமான உறவாக இருந்த அன்புச் சீடர் புனித யோவான் தமது முதலாம் திருமுகத்திலே "தொடக்கமுதல் இருந்த வாழ்வு அளிக்கும் வாக்கை நாங்கள் கேட்டோம் கண்ணால் கண்டோம் உற்று நோக்கினோம்............... .எங்களது மகிழ்ச்சி நிறைவடையுமாறு இதை எழுதுகின்றோம்"*(1யோவா1:1-4)* என்று ஆணித்தரமாகக் குறிப்பிடுகிறார். இந்த மகிழ்வின் நிறைவு இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பின் பின் சீடர்கள் அனுபவித்த சமாதானத்தின் நிறைவாகும். "அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கின்றேன் என் அமைதியையே உங்களுக்கு அளிக்கின்றேன், நான் உங்களுக்குத் தரும் அமைதி, உலகம் தரும் அமைதி போன்றது அல்ல; நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம், மருள வேண்டாம்" *(யோவா14:27)*என்று சமாதானத்தின் ஆசீரை தம் சீடர்களுக்கு அளிக்கிறார். இயேசு மனிதனாக இவ்வுலகில் வாழ்ந்த போதும், உயிர்த்த ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவாக விண்ணகம் சென்ற பின்பும் தம் மக்களுக்கென விட்டுச் சென்றுள்ள விலைமதிக்க முடியாத சொத்து "சமாதானமாகும்."

## தூய பவுலின் நோக்கில் – உயிர்த்த இயேசுவின் சமாதானம்

தூய பவுலின் நோக்கில், அவரது உயிர்த்த இயேசு அனுபவத்தில் "சமாதானம்" என்பதன் நிறைவை நோக்கும் போது உயிர்த்த இயேசு கிறிஸ்துவிடமிருந்தே அருளும், அமைதியும், சமாதானமும் வருகின்றது என்பது புலனாகின்றது. "ஆண்டவராகிய கிறிஸ்துவிடமிருந்து உங்களுக்கு அருளும், அமைதியும் உண்டாகுக" *(கலா1:3; எபே1:2; திருவெளி1:4)* என்று குறிப்பிடுகின்றார். ஆனால் எங்கே அமைதி? எங்கே நிம்மதி? என்று, நாம் வாழும் இன்றைய உலகில் அமைதியை பல வழிகளில் தேடி அலைகின்றோம். பணத்தில், பட்டத்தில், புகழில்,பதவியில், அதிகாரத்தில்,உலக இன்பங்களில், அமைதியை, சமாதானத்தைப் பெற்றுவிடலாம் என்று தீவிரமாகச் செயற்படுகின்றோம். இது தனிமனிதனிலும், சமூகத்திலும், நாட்டிலும் புரையோடிப்போன ஒரு நோயாகத் தொடர்வதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்கின்றோம். இவை மனிதன் தேடுகின்ற அமைதியைக் கொடுப்பதில்லை என்பதும் கண்கூடான அனுபவம். ஏனென்றால் அன்றாட வாழ்க்கையில் ஏற்றமும், தாழ்வும், நோயும், நலமும், வெற்றியும், தோல்வியும், வறுமையும், வளமையும் மாறி மாறி மனித வாழ்வை நெருக்குகின்றபோது மனம்சோர்ந்து தளர்ந்து போகின்றோம். சவால்களுக்கு முகம் கொடுக்காமல் நிலை குலைகின்றோம். ஏன் இப்படியான அமைதியிழந்த நிலை உருவாகுகின்றது? என்பதைச் சிந்திக்கும் போது கவிஞன் ஒருவன் பாடிய "இருக்கும் இடத்தை விட்டு, இல்லாத இடம் தேடி ஏனோ அலைகிறாய் ஞானத் தங்கமே" என்ற பாடல் வரிகள் நினைவுக்கு வருகின்றன. புனித பவுல் இந்த துன்பங்கள் மத்தியிலும் அமைதியைத் தருபவர், மனதிற்கு அரணாக இருப்பவர் ஒரே ஒருவர்தான் - அவர்தான் ஆண்டவராகிய உயிர்த்த இயேசு என்று குறிப்பிடுகின்றார். "அறிவெல்லாம் கடந்த இறைஅமைதி கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் உள்ளத்திற்கும், மனதிற்கும் அரணாக இருப்பதாக *(பிலி 4:7)* என்றும் கிறிஸ்து அருளும் அமைதியும் உங்கள் உள்ளங்களை நெறிப்படுத்துவதாக" *(கொலோ 3:15)* என்றும் கூறுகின்றார்.

## ஒப்புரவே – உயிர்த்த இயேசுவின் சமாதானம்

"சமாதானம்"என்பது அமைதி, ஆசி, முழுமை,நலம், நிறைவு, மகிழ்வு என்ற தன்மைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. மேலும் சமாதானம் என்பது தீமை, போர், ஈகை, போராட்டம் என்பனவற்றின் எதிர் நிலையாகவும் உள்ளது. இது எக்காலத்தும் நிலைத்து நிற்கும் உடன்படிக்கையாகவும், ஆசீர்வாதமாகவும், மீட்பாகவும், ஒப்புரவாகவும் விளங்குகின்றது. சமாதானத்தின் நிறைவாக இருக்கும் உயிர்த்த இயேசுவே இவை அனைத்தையும் நிறைவு செய்பவராக இருக்கிறார். இதையே தூய பவுல் உயிர்த்த இயேசுவே அமைதி அருள்பவர் அவரே இரண்டு இனத்தாரையும் பிரித்து நின்ற பகைமை என்னும் சுவரை............ தகர்த்தெறிந்து ஒப்புரவை, அமைதியை அளித்தார் *(எபே 2:11-22)* என்று குறிப்பிடுகின்றார்.

கிறிஸ்துவின் உயிர்ப்பானது கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே இருந்த முரண்பாட்டை, வேற்றுமையை முற்றும் நீக்கி சமாதானத்தை உருவாக்குவதற்கு அடித்தளமாக, அச்சாரமாக அமைகின்றது. கிறிஸ்துவின் உயிர்ப்பில் இறைத்தந்தையின் மீட்புத் திட்டம் முழுமை பெறுகின்றது. அதாவது விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை அனைத்தையும் இயேசுவின் பாஸ்கா மறைநிகழ்வின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடாகதம்மோடு ஒப்புரவாக்கும் *(கொலோ.1:20)* அன்பின் திட்டம் நிறைவாக்குகின்றது. யூதருக்கும் புறவினத்தாருக்கும் இடையில் காணப்பட்ட பிளவுகளும், பிரிவினைகளும்,வேறுபாடுகளும் கிறிஸ்துவின் பாடு, மரணம், உயிர்ப்பினால் தகர்த்தெறியப்படுகின்றது. இதனால் ஒற்றுமையின், ஒப்புரவின், ஒன்றிப்பின் சமாதானம் உருவாகியது. இதுதான் கிறிஸ்துவின் உயிர்ப்பின் புரட்சி. இதைத்தூயபவுல் "இனி யூதனென்றும், கிரேக்கனென்றும் இல்லை, அடிமை என்றும் உரிமைக் குடிமகன் என்றும், ஆண் என்றும் பெண் என்றும் இல்லை...... கிறிஸ்துவுக்குள் அனைவரும் ஒன்றே" *(கலா.3:28)* என்று எடுத்தியம்புகின்றார். மனிதன் பாவத்தினால் இறைவனிடம் இருந்து தானே அந்நியனாகினான். இதனால் தனக்குள்ளும், சமூகத்திற்குள்ளும் பகைமையின் காரணமானான். அமைதி வாழ்வை சமாதானத்தை இழந்தான். *(உரோ.5:10)* இருந்தும் பரலோக தந்தை மனுக்குலம் அனைத்தின் மீதும் கொண்ட நிபந்தனையற்ற அன்பினால் தமது அன்பு மகன் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பினால் தம்மோடு அனைத்து மக்களையும், படைப்புக்களையும் ஒப்புரவாக்கி எக்காலத்திற்குமுரிய சமாதானத்தை படைப்பு அனைத்திற்கும் ஆசீராகப் பொழிந்துள்ளார் *(எபே.1:3-10)*. இதுவே மூவொரு இறைவனுக்குள் மாந்தரனைவரையும், படைப்புக்களையும் ஒன்றிணைக்கும் ஒப்புரவின் இறுதியியல் சமாதானமாகும்.

## உயிர்த்த இயேசுவும் – புதிய சமுதாயமும்

இயேசுவின் உயிர்ப்பு நம் விசுவாசத்தின் முதற் பொருளாகவும், நம்பிக்கைக்கு அடித்தளமாகவும், விண்ணக முன் சுவைக்குத் திசைகாட்டியாகவும், ஒப்புரவுக்கு இனணப் பாலமாகவும், உலகம் தரமுடியாத சமாதானத்திற்கு ஊற்றாகவும் அமைகின்றது. இயேசுவின் மனுவுருவில் ஆரம்பிக்கப்பட்டு, சிலுவையில் முற்றுப் பெற்ற மீட்புப் பணிக்கு இயேசுவின் உயிர்ப்பு முத்திரையிடுகின்றது. இறந்தோரிடமிருந்து பிறந்த முதல் தலைப்பேறான இயேசு *(கொலோ.1:18)* தம் பாடு, மரணம்,உயிர்ப்பினால் மீட்புப்பெற்ற உலகாகிய புதிய படைப்பில் முதல் ஆளாக நுழைந்தார். அவரைத் தொடர்ந்து இப் புதிய படைப்பில் நாமும் சமாதானமாக வாழ கிறிஸ்துவின் உயிர்ப்பு நமக்கு நுழைவாயிலாகின்றது. *(எசா 65:17 )* மேலும், இறை ஆற்றலின் ஊற்றாக விளங்கும் கிறிஸ்து தமக்கென்றே தம் வழியில் ஒரு புதிய சமுதாயத்தை *(1பேதுரு.2:1-9)* உருவாக்கும் மூலைக்கல்லாகவும் திகழ்கின்றார். எனவே திருமுழுக்கின் வழியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசுவின் பாதை தொடர பல்வேறு நிலைகளில் அழைக்கப்பட்டுள்ள நாமும் பகைவருக்கு - அன்பு வெறுப்பவருக்கு - ஆசி துன்புறுத்து வோருக்கு - மன்னிப்பு ஒடுக்கப்பட்டோருக்கு - உரிமை வாழ்வு சிறைப்பட்டோருக்கு - விடுதலை, எளியோர்க்கு நற்செய்தி என்ற இறையரசின் விழுமியங்களால் புதியதொரு சமுதாயத்தை உருவாக் கும் சமாதானத்தின் தூதுவர்களாகத் திகழ அழைக்கப் பெறுகின்றோம்.

## சமாதானத்தின் கருவிகளாவோம்:

"தூங்குபவனே விழித்தெழு, இறந்தவனே உயிர் பெற்றெழு கிறிஸ்து உன் மீது ஒளிர்ந்தெழுவார் " *(எபே.5:14).* வேறுபாடுகளால் சமாதானத்தை இழந்து பிளவுபட்ட நிலையிலேயே இருக்கிறது. மனித உள்ளங்கள் பாவத்தினால், கடின மனத்தினால், அதிகார வேட்கையால், போட்டி பொறாமையால், வரட்டுக் கௌரவங்களினால், பதவி ஆசையால், நீதி, மன்னிப்பு, இரக்கம் அற்ற செயல்களால் ஆட்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்நிலைகளிலிருந்து விழித்தெழுந்து புதிய வாழ்வை வாழ, புதிய சமுதாயத்தைப் படைக்க கிறிஸ்துவின் உயிர்ப்பின் பாஸ்காப் பெருவிழா நம்மை அழைக்கிறது. இவ்வழைப்பு நமக்கு ஒரு சவால். தூய பவுல் கூறுவது போல் "நாங்கள் எல்லா சூழ்நிலையிலும் இன்னலுற்றாலும் மனம் உடைந்து போவதில்லை நம்பிக்கை இழப்பதில்லை, கைவிடப்படுவதில்லை ................" *(2கொரி.4:8-11).* இவ்வுயிருள்ள இறைவார்த்தையின் ஒளியில் அன்றாட வாழ்வில் நாம் அனுபவிக்கும் மகிழ்வின் சக்தியே சமாதானத்தின் கருவிகளாக எம்மை உருவாக்கும். எனவே உண்மையை இடைக் கச்சையாக கட்டிக் கொண்டு நீதியை மார்புக் கவசமாக அணிந்து கொண்டு சமாதானத்தின் நற்செய்தியை மிதி அடிகளாக போட்டுக்கொண்டு *(எபே.6:14-17)* உயிர்த்த இயேசு தரும் நிலையான சமாதானத்தின் தூதுவர்களாக புதிய தொரு சமுதாயத்தை உருவாக்க உறுதிகொள்வோம்.


***துணை நின்ற நூல்கள்***

(1)விவிலியக் களஞ்சியம் - "தியாகு" லிவிலிய அறிமுகம், தியாக ஆச்சிரமம் புதிய குருக்கள்-1978 சென்னை-மார்ச் 1991

(2)உயிர்ப்பின் ஒளியிலே - புனித இராயப்பர் தமிழ்க் கழகம், புனித இராயப்பர் குருத்துவ கல்லூரி பெங்களூர் 560555

(3) திரு விவிலியம் (இணைந்த திருமறையுடன்) புதிய மொழி பெயர்ப்பு லிவிலிய, மறைக்கல்வி, திருவழிபாட்டு நிலையம் திண்டி வனம், இந்தியா - 1995





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரிய அல்லது நியாயமான போர்க் கோட்பாடு

## THE JUST WAR THEORY

அருட்தந்தை ம. டேவிட்

### அறிமுகம்

மனித இருப்பில் நிலைத்து நிற்கின்ற பொய்ம்மை போராகும். பண்டைய காலத்தில் இருந்து இன்றைய காலம் வரை மனிதன் பெரும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வழியாகப் போரைக் கையாண்டு வந்திருக்கின்றான். போர் மனித வாழ்வின் ஒரு பகுதியாக இருந்தாலும் எல்லா நாகரீகங்களிலும் மனிதன் போரையும் அது நடத்தப்படும் விதத்தையும் எப்படி கட்டுப்படுத்தலாம் என்பதனையும் சிந்தித்து வந்துள்ளான்.

எனவே சிறப்பாக மேற்கத்தேய நாடுகளில் எப்போது இந்தப் போர் நடத்தப்படலாம் என்றும், எந்த வழிகளில் நடத்தப்படலாம் என்பதனையும் ஆராய்ந்த போது உருவாக்கப்பட்ட கோட்பாடுதான் நியாயமான போர்க் கோட்பாடாகும் (The Just War Theory). இது மேற்கத்தேய கலாச்சாரத்திலும் சர்வதேச சமூகத்திலும் மிகவும் பரவலாக வரவேற்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கோட்பாடாகும்.

### இக்கோட்பாட்டின் பொதுவான பின்னணி

இக்கோட்பாடு பலதரப்பட்ட பின்னணிகளைக் கொண்டது. இந்த நியாயமான போர்ப் பாரம்பரியம் உரோமையர் காலத்திலிருந்து வந்த மெய்யியல், இறையியலாளர்களின் பங்களிப்பைக் கொண்டதாகும். மேலும் இது மனித வரலாற்றில் நடந்த போர்களின் அனுபவங்களின் மூலம் இன்னும் சர்வதேச சட்டங்களின் அடிப்படையிலும் வளர்ச்சி பெற்றுள்ளது. இது சீசாரோ (Cicero), புனித அகுஸ்தீனார் (St. Augustine), புனித அக்குயினாஸ் தோமையார், குறொய்ரஸ் (Crotius), இன்னும் டானியல் வெப்ரர் (Daniel Webster) என்ற பலதரப்பட்டவர்களினால் பங்களிப்பு பெறப்பட்டு இன்று ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடாகும். இது கிறீஸ்தவர்களினாலும் கிறீஸ்தவர்கள் அல்லாதோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் கோட்பாடாகும். எனவே இது பலரால் பல நூற்றாண்டுகளாக பங்களிப்பு பெற்ற ஓர் கோட்பாடு என்ற படியால் இதன் வரலாற்று பின்னணியை ஆராய்வது இந்த கோட்பாட்டை புரிய பெரிய உதவியாக இருக்கும்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தக் கோட்பாட்டின் பிரதான அடிமூலங்கள் (Main Sources)

1) இக் கோட்பாட்டின் சமயம் சார்ந்த அடிமூலங்கள் (Religious Sources of this Theory)

இந்த கோட்பாட்டிற்கு அடிநாதமாக விளங்கிய சிந்தனையாளர்கள் கிறிஸ்தவ புரட்டஸ்தாந்து மெய்யியலாளர்கள், இறையியலாளர்கள் மற்றும் சட்ட நிபுணர்களாவர். எனவே, இக்கோட்பாட்டிற்கு கிறிஸ்தவ சிந்தனையாளர்களின் சிந்தனைகளும் பின்பு சமயம் சார்பற்ற உலகம் (Secular World) இக் கோட்பாடு மட்டில் கொண்டுள்ள சிந்தனைகளும் ஊற்றாக அமைந்துள்ளது.

ஆரம்ப காலத்தில் கிறீஸ்தவர்கள் தங்களை சமூகத்தில் வித்தியாசமானவர்கள் என்று கணித்ததால், போர் மட்டில் ஓர் போர் ஒழிப்பு நோக்கையே (Pacifist) கொண்டிருந்தனர். காலப்போக்கில் உரோமைய சாம்ராச்சியத்தில் ஏற்பட்ட கிறிஸ்தவ மயமாக்கல், திருச்சபையில் ஏற்பட்ட அரசியல் சமூக தாக்கங்கள் என்பவற்றால் நான்காம் ஐந்தாம் நூற்றாண்டுகளில் வன்முறை பயன்படுத்தப்படுவது (War of Force) நியாயப்படுத்தப்பட்டமை இறுதியில் நியாயமான போர்க்கோட்பாட்டின் உருவாக்கத்திற்கு வழிசமைத்தது.

எந்த சூழ்நிலைகளில் போர் சட்ட பூர்வமானது (Legimate) என்பதனை முதன் முதலில் அறிமுகப்படுத்திய கிறீஸ்தவ இறையியலாளர் புனித அகுஸ்தீனார் ஆவார். இவரின் கருத்துப்படி ஒரு நாட்டின் சமாதானத்தை உறுதிப்படுத்த ஒரு அரசனுக்கு உள்ள இயற்கையான அதிகாரங்களில் அல்லது செயல்திறன்களில் (Natural Power) ஒன்று போர் தொடுக்க உள்ள செயல்திறன் ஆகும். இயற்கையாக நாட்டின் தலைவருக்கு உள்ள இந்தச் செயல் எந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படவேண்டும், எப்படிப் பயன்படுத்தப்படவேண்டும் என்பதனையும் இவர் சிறப்பாக குறிப்பிட்டுள்ளார். எனவே போர் நியாயமானதாக இருக்க வேண்டும்; என்றால் சரியான அதிகாரியால் (Rightful Authority) சரியான நோக்கத்திற்காக (Right Reasons) செய்யப்பட்ட போராக இருக்கவேண்டும். எனவே இவரின் கண்ணோட்டப்படி போருக்கான ஒரே ஒரு நோக்கம் சமாதானமாகும். இன்னும் பொது நன்மையை பாதுகாக்கும் பொறுப்பில் இருக்கும் நாட்டின் தலைவரே இந்த முடிவை எடுக்கக் கூடிய வல்லமை உள்ளவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித அகுஸ்தீனாரின் சிந்தனைகளை இன்றும் ஆழப்படுத்தியுள்ளவர் புனித அக்குயினாஸ் தோமையார் ஆவார் (1225-1274). இவர் போர் செய்வதற்கான முடிவை அடைய முக்கிய நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்றார். அவையாவன:

1. ஓர் சட்ட பூர்வமான அதிகாரம் (Lawful authority) பெற்ற ஒருவரால் போர் தொடுக்கப்பட வேண்டும்.
2. சரியான காரணத்திற்காக (Just Cause) மட்டும் போர் தொடுக்கப்படலாம்.
3. தீமையை தவிர்த்து நன்மையை அடைதல் என்பதே சரியான நோக்கம் (right intention) ஆகும். எனவே புனித அகுஸ்தீனார், புனித அக்குயினாஸ் தோமையார் என்பவர்களின் இந்த சிந்தனைகளே நியாயமான போர்க் கொள்கையின் மூலமாக அமைந்தது. இதனையே தற்கால சிந்தனையாளர்கள் சூழ்நிலைக்கு ஏற்றவாறு சீராக்கி (adapt) விரிவுபடுத்தினார்கள்.

2. இக்கோட்பாட்டிற்கான சூழமைவற்ற மூலங்கள் (Secular Sources of the Just War Theory)

இதனை மிகவும் சுருக்கமாக குறிப்பிட விரும்புகின்றேன். ஒரு நீண்ட காலப் பகுதியில் இவர்களின் பங்களிப்பு அமைகிறது. பழைய கால உரோமைய மெய்யியளாளர் சீசரோ (Cicero) முதல் டச்சு புரட்டஸ்தாந்து கியூகோ குரோசியஸ் (Hugo Grotius) வரை இவர்களின் பங்களிப்பு உண்டு. இன்னும் நூன்பேக் போர்க்கால குற்றவியல் நீதிமன்று (Nurenburg War Crime Tribunal) மற்றும் ஐக்கிய நாடுகள் சாசனம் (United Nation Charter) என்பன போர்கள் மட்டில் கொடுத்த தற்கால தீர்ப்புக்கள் இந்த கோட்பாட்டின் உருவிற்கு ஊற்றாக அமைந்தன.

சீசரோவின் சிந்தனைப்படி ஓர் சரியான ஆளும் அதிகாரம் கொண்ட ஒருவரால் மட்டுமே போர் தொடுக்க முடியும். போர் தொடுக்க முதல் போர் தொடுக்கப்போகிற பகுதிக்கு எச்சரிக்கை நேரத்துடன் கொடுக்கப்படவேண்டும்.

இன்னும் நாட்டின் தனிப்பட்ட சட்டங்களுக்கு மேலாக ஓர் உலகளாவிய சட்டம் உலக சமூகத்தை (Society of Mankind) அடிப்படையாகக் கொண்டது கடல்கள் என்றும் உணர்த்தினார். இந்த சிந்தனை கியூகோ குறோசியஸ் (Hugo Grotius) என்பவரினால் பின்பு மேலும் வலுக்கொடுக்கப்பட்டு நியாயமான போர்க்கோட்பாட்டில் பெரிய வளர்ச்சியைக் கொணர்ந்தது.

குறோசியஸ் (Grotius) என்பவர் சர்வதேச சட்டத்தின் தந்தை எனப்படுவார். (Father of International Law).இவர் 16ம் நூற்றாண்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்த டச்சு புரட்டஸ்தாந்து சபையை சார்ந்தவர். ஐரோப்பாவில் நடந்த முப்பது வருட போரின் இறுதியில் தற்பாதுகாப்பிற்காக ஒரு நாடு வன்முறையை (force) பாவிக்கின்ற உரிமை உண்டு என்பதனை வெளிக்கொணர்ந்தார். இவர் தான் ஒரு சமயப் பின்னணியில் இந்த நியாயமான போர்க் கோட்பாட்டை சமய சார்பற்ற வெளியுலகிற்கு (Secularized World) கொண்டுவந்தார். இவரின் சிந்தனைப்படி ஒரு போர் நீதியானதாக இருக்க மூன்று விடயங்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

1: ஒரு நாடு எதிர்கொள்ளும் ஆபத்து உடனடியானதாக (immediate) இருக்க வேண்டும்.
2. பாவிக்கப்படும் வன்முறை (force) நாட்டின் நலன்களை பாதுகாக்கக் கூடியதிற்களவானதாக இருக்க வேண்டும்.
3. பாவிக்கப்படும் வன்முறை எதிர்கொள்ளப்படுகின்ற ஆபத்திற்கு சரியான விகிதம் (propotional) கொண்டதாக இருக்க வேண்டும்.

இவ்வாறாக வளர்க்கப்பட்ட இந்தக் கோட்பாட்டை 1842ல் அமெரிக்க நாட்டின் செயலாளர் நாயகம் (Secretary of State), டானியல் வெப்ரர் (Daniel Webster) என்பவர் குறோசியஸ் நீதியான போர் மட்டில் பாவித்த விதிகளை (Norms) முதல் முறையாக அதிகாரபூர்வமாக ஏற்றுக் கொண்டார். இதனை சிறப்பாக அந்த நாளில் நடைபெற்ற கரோளின் சம்பவத்தை (Caroline Incident) தீர்ப்பதற்கு இந்தக் கோட்பாட்டை பயன்படுத்தினார். இதில் இருந்து இந்தக் கோட்பாடு சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றது.

இதனைத் தொடர்ந்து இரண்டாவது உலகப்போரின் பின் வந்த இரண்டு முக்கிய ஆவணங்கள் இந்த நியாயமான போர்க்கொள்கையை இன்னும் அதிகமாக ஆதரித்து வெளிவந்தன. அவையாவன: நூரன்பேர்க் போர்குற்றி வழக்குகளின் சாசனம் (Charter for Nurenburg War Crimes Trials) மற்றும் ஐக்கிய நாடுகளின் சாசனம் (United Nations Charter).

இவ்வாறாக ஓர் சமயப்பின்னணியில் தோன்றிய இந்த நியாயமான போர்க்கொள்கை இன்று சர்வதேச ரீதியில் பயன்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது. ஐக்கிய நாடுகளின் சாசனத்தில் உள்ள சரத்து 51 இதனை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

இந்தக் கோட்பாட்டின் படி ஓர் போர் நியாயமானதாக இருக்கவேண்டுமானால் பின்வரும் நிபந்தனைகளின் படி அமைய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. நியாயமான காரணம் (Just Cause) இருக்க வேண்டும்

நியாயமான காரணம் என்பது தற்பாதுகாப்பைக் குறிக்கின்றது. எனவே இராணுவ பலம் என்பது நீதியற்ற முறையில் ஆக்கிரமிப்பு செய்பவரை வெளியேற்றி ஆக்கிரமிப்பு செய்தவர் பறித்தவற்றை மீளப்பெறப்பயன்படுத்தப்படும். இன்னும் ஒரு நாடு இன்னும் ஒரு நாட்டின் மீது செய்யப்பட்ட ஆக்கிரமிப்பைத் தடுக்கவும் இப் பலம் பாவிக்கப்படலாம். எனவே ஒரு நாடு தன்னைப் பாதுகாக்க அல்லது இன்னுமோர் நாட்டை நியாயமற்ற ஒரு ஆக்கிரமிப்பில் இருந்து விடுவித்தல் நியாயமான காரணங்கள் ஆகும்.

2. தக்க திறன் உள்ள அதிகாரியினால் (Competent Authority) தீர்மானிக்கப்பட வேண்டும்

ஒரு தகுந்த திறன் உள்ள அதிகாரியினால் மட்டும் போர் பிரகடனப்படுத்தப்படலாம். தனிப்பட்ட குழுக்களாகவோ அல்லது தனிநபர்களினாலோ இந்த தீர்மானம் எடுக்கப்படமுடியாது.

3. சரியான நோக்கம் (Right Intention) இருக்க வேண்டும்

போருக்கான ஒரே ஒரு நோக்கம் சமாதானத்தை மீண்டும் கொண்டு வருவதேயாகும். எனவே, போருக்கு பின்வந்த சமாதான சூழ்நிலை என்பது போர் நடக்கமுன் இருந்த நிலையை விட விரும்பத்தக்கதாக இருக்கவேண்டும். இன்னும் சரியான காரணத்தில் குறிப்பிடப்பட்ட அம்சங்களும் இதில் அடங்கும்.

4. போர் கடைசியான ஓர் வழியாக (Last Resort) இருக்க வேண்டும்

ஒருவர் போருக்குப் போக முன்னர் சமாதானத்தை அடைய உள்ள எல்லா விதமான அகிம்சை வழிகளிலும் முயற்சி செய்யப்பட்டிருக்கவேண்டும். அதாவது போர் ஓர் வழி என்றால், அதற்கு மாற்றாக இருக்கக் கூடிய எல்லா வழிமுறைகளும் முயற்சி செய்யப்பட்டிருக்கவேண்டும். அப்போது தான் வன்முறையைப் பாவித்தல் இறுதியான ஓர் வழியாக கணிக்கப்படும்.

5. வெற்றிக்கான சந்தர்ப்பம் (Probability of Success) இருக்கவேண்டும்.

போரில் வெற்றி பெறக் கூடிய ஓர் சந்தர்ப்பம் உண்டு என்றால் மட்டுமே போர் தொடங்கப்பட வேண்டும். இதனை நிர்ணயிப்பது என்பது மிகவும் கடினமானதாகும். ஆனால் வெற்றி இல்லாதிருக்கும் என்று தெரிந்தும் வீணாகப் போருக்குப் போய் பயனற்ற முறையில் வீண் உயிர் உடமை என்பன விகித மற்ற முறையில் ஏற்படுவதை தவிர்க்க இது உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 6. சரியான அளவுவிகிதம் (Proportionality) இருக்க வேண்டும்

அதாவது ஓர் போரினால் வரஇருக்கும் நன்மையானது ஏற்படப்போகும் அழிவுகளுக்கும், ஏற்படப்போகும் செலவுகளுக்கும் சரியான அளவு விகிதத்தில் இருக்கவேண்டும். எனவே, ஓர் சிறிய நன்மையை மட்டும் அடைய இப்போரைப் பயன்படுத்துதல் குற்றமாகும்.

### 7. பயன்படுத்தப்படும் ஆயுதங்கள் (Weapons) மட்டில் கவனம் தேவை

சண்டையில் ஈடுபடுபவர்கள் யார் (combatants) சண்டையில் ஈடுபடாதவர்கள் யார் (non combatants) என்பதனை இனங்காணக் கூடியதாக பயன்படுத்தப்படும் ஆயுதங்கள் இருக்கவேண்டும். பொதுமக்கள் ஒருபோதும் போரின் இலக்குகளாக இருக்க முடியாது. பொதுமக்களைக் காக்க போரில் எல்லா முயற்சிகளும் எடுக்கப்படவேண்டும். ஒரு இராணுவ இலக்கை தாக்கும் போது அங்கே பொதுமக்கள் தாக்கப்படுவது தவிர்க்க முடியாததாக இருக்கும்போது மட்டுமே பொதுமக்களின் இறப்பு நியாயப்படுத்தப்படலாம்.

### முடிவுரை

இந்தக் கட்டுரையில் நியாயப்போர் (Just War) எவ்வாறு தோன்றியது, அதன் சமய, சமயமற்ற பின்னணிகள் என்ன என்பதனையும் இன்னும் சுருக்கமாக நியாயப்போரில் உள்ள நிபந்தனைகளையும் குறிப்பிட்டுள்ளேன். இந்த கட்டுரை எழுதப்பட்டுக் கொடுத்தபோது அமெரிக்க கூட்டுப்படைகள் ஈராக் மீது மூர்க்கத்தனமான ஒரு போரை நடாத்திக்கொண்டிருக்கின்றன. எனவே, என்னைச் சந்திக்க வந்த ஒரு குரு சொன்னார் ஐக்கிய நாடுகளின் சபையின் சம்மதம் இன்றியே இன்று இந்த போர் நடக்கக்கூடிய சர்வதிகாரப் போக்கில் உலகம் இருக்கும் போது நீர் நியாயப் போர் பற்றி கதைக்கின்ற ஓர் ஆரம்பநிலையில் இருக்கிறீர் என்றார். அவருடைய சிந்தனை ஆழமானது. என்னுடைய பதில் நியாயப்போர் என்பது தற்பாதுகாப்புக்காக மட்டும் நடத்தப்படுவது ஆகும். அநியாயமாக ஆக்கிரமிப்பு செய்வது ஒரு நாட்டுக்கு எதிரானது ஆகும். எனவே, தற்போதைய ஈராக்கிற்கு எதிரான போரை இந்தக் கோட்பாட்டினால் நியாயப்படுத்த முடியாது.

சமூகத்தில் நாம் விரும்பியோ விரும்பாமலோ பல போர்கள் நடந்துகொண்டே இருக்கின்றன. சில தற்பாதுகாப்பு போர்கள், பல ஆக்கிரமிப்புப் போர்கள். தற்பாதுகாப்புப் போர் தேவைப்படுமிடத்து அது எப்போ நியாயப்படுத்தப்பட முடியும் என்பதனை கண்டறிய இந்தக் கோட்பாடு நிச்சயம் உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்த காலத்தில் மதிக்கப்பட வேண்டிய மனித உரிமைகள்

-அருட்திரு. இ. ஸ்ரலின் -

இஸ்ராயேல் அரசர்கள் எப்பொழுதெல்லாம் இறைவாக்கினர்க்கு செவிமடுத்து யுத்த களம் சென்றார்களோ அப்பொழுதெல்லாம் வெற்றி வாகை சூடித் திரும்பி வந்தார்கள். மாறாக, தம் சுயவிருப்பு, வெறுப்பின் அடிப்படையில் மக்கள் நலன், சுதந்திரம், உரிமை என்பனவற்றைக் கருத்தில் கொள்ளாமல் படையெடுப்பில் ஈடுபட்டபொழுதெல்லாம் தோல்வியைத் தழுவினார்கள். மக்கள் சொல்லொணாத் துன்பங்களுக்குள்ளாகக் காரணமுமானார்கள். மக்களை ஆளுகின்றவர்கள் மக்கள் நலனைக் கருத்தில் கொண்டும் கடவுள் குரலுக்குச் செவிமடுத்தும் வாழும் உண்மையான இறைவாக்கினருக்குச் செவிசாய்க்க வேண்டும். அவர்கள் அரசியல் செயற்பாடுகளை இறைவார்த்தை நெறிப்படுத்த வேண்டும். இது மக்கள் உரிமை என்பதை பழைய ஏற்பாட்டு ஏடுகள் சொல்லாமல் சொல்லி நிற்கின்றன.

தாவீது அரசன் இறைவனுக்கு ஆலயம் அமைக்க விரும்பினான். ஆனால் அவனுக்கு இறைவன் அனுமதி வழங்காதற்குக் காரணம் அவன் அதிக இரத்தம் சிந்திய ஆளாக இருந்ததுதான். எவரை ஆள்பவர்களாக இருந்தாலும் இரத்தக்கறைபடிந்தவர்கள் கடவுள் தன் மக்களுக்கு விரும்பும் ஒரு சமுதாயத்தை, இறையரசைக் கட்டியெழுப்ப முடியாது என்பதை இது குறித்துக் காட்டுகிறது.

தமிழ் மக்கள் சம உரிமையோடு வாழும் நிலை விரைவாக வரவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து எதற்கும் இடமில்லை. ஆனால் தமிழ் மக்கள் தம் சொந்த மக்களுக்கே பல்வேறு அரசியல், சமூக, சமய, பால்நிலைசார் உரிமை மறுப்புகள் செய்து கொண்டு மாற்று இனத்திடம் உரிமை கேட்பது எதிர்காலத்தில் எத்தகைய சுதந்திர சமூகத்தை உருவாக்கும் என்பது பற்றிச் சற்றுத் தீவிரமாகச் சிந்தித்துப் பார்ப்பது பயன்தரும். யுத்த காலமாக இருந்தாலும் சரி சமாதான காலமாக இருந்தாலும் சரி மனித உரிமைகள் மீறப்படக் கூடாதவை. மீறுபவர்கள் பிறர்க்கு மட்டுமல்ல தமக்கே தீமை செய்து கொள்கிறார்கள். காரணம் இவர்கள் தம் இதயத்தில் மனிதத்தைக் கொலை செய்துவிடுகிறார்கள்.

நம் நாட்டில் கடந்த இரு தசாப்தங்களாக நிகழ்ந்த போரின்வேளை நிகழ்ந்த அனுபவங்களின் அடிப்படையில் அடிப்படை உரிமைகள் சிலபற்றிய சிந்தனைகள் தரப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. **உயிர் வாழும் உரிமை:** யுத்த காலத்திலும் எவருக்கும் உயிர் வாழும் உரிமை உண்டு. தீர விசாரிக்காமல் துப்பாக்கி கொண்டுள்ளவரின் தீர்மானத்தில் எவர் உயிரும் தொங்குமாயின் மனிதம் அழிந்து விட்டது என்பது தான் அர்த்தம். உயிர் அழிப்பு இரகசியமாகவோ பகிரங்கமாகவோ நிகழலாம். ஆனால் உயிர்கடவுளிடம் இருந்து வருவது மாண்பு மிக்கது பெறுமதி மிக்கது மதிக்கப் படவேண்டியது. குற்றமிழைத்தவர்களுக்கு மரணதண்டனை கொடுக்கக் கூடாது என்று மனிதம் நிறைந்தவர்கள் கொடியேந்தி நிற்க யுத்த காலத்திலும் சமாதான காலத்திலும் உயிர்கள் அழிவது தடுத்து நிறுத்தப்பட முடியாத ஒன்றா? யுத்த காலத்திலே உயிர் அநியாயமாக இழப்புக்குள்ளாவது உண்மை. ஆனால் தவிர்க்கக் கூடிய உயிரிழப்புக்களை தவிர்க்க முயற்சிகள் மேற்கொள்வது அவசியம். மக்களை கேடயமாகப் பயன்படுத்தல், மக்கள் குடியிருக்கும் பகுதிகளை தாக்குதல் அல்லது எதிர் தாக்குதல் நிகழும் என்று தெரிந்தும் மக்கள் குடியிருப்புகளிலிருந்து தாக்குதல்களை மேற்கொள்ளல் என்பன மக்களின் உயிர் வாழவுக்கான உரிமைகளை மீறல் என்றே கொள்ள வேண்டும்.

2. **கைதிகள் பராமரிப்பு:** கைது செய்யப்படுபவர்கள், சரணடைந்தவர்கள் மனிதாபிமான முறையில் நடாத்தப்பட வேண்டும் என்பது அவர்கள் உரிமை. ஆனால் இவர்கள் வதை,கொலை,என்பவற்றிற்கு உட்படுத்தப்ப டுகிறார்கள் என்பது யாவரும் அறிந்த உண்மை. இயேசு கைதியாகி சித்திரவதை செய்யப்பட்டு, மக்களை மகிழ்ச்சிப்படுத்தவும் பிரச்சினை கட்டுமீறிப்போகாது தடுக்கவும் அநியாயக் கொலைக்குள்ளானவர் என்பது இங்கே நினைவு கூரத்தக்கது.

3. **நியாயமான விசாரணைக்கான உரிமை:** அநியாய சட்டங்களின் அடிப்பட்டையில் விசாரணை மேற்கொண்டு தண்டனை வழங்குல், தடுத்துவைத்தல் என்பன அடிப்படை மனித உரிமை மீறல். அதே போன்று நடுநிலமை, தகுதி, முதிர்ச்சி என்பன அற்றவர்கள் நீதிபதிகளாக செயற்படல் என்பனவும் அடிப்படை உரிமை மீறலாக கொள்ளப்பட வேண்டும். பொது நீதிமன்றங்களிலே விசாரிப்பதற்குப் பதிலாக இராணுவ அல்லது குழுக்களின் பிரத்தியேக பொதுமக்கள் அறியமுடியாத நீதிமன்றங்களில் விசாரித்து தண்டனை வழங்கலும் உரிமை மீறலேயாம். குற்றவாளிகளைக் காப்பாற்ற வேறிடங்களுக்கு வழக்கை மாற்றி வழக்காளிகளை அலைக்கழித்து வழக்கை கைவிடச்செய்யும் யுக்தியைக் கையாள்வதும் இவ்விடயத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றொரு உரிமை மீறலாகும். சொந்தப் பிரதேசங்களிலே வழக்குகளை விசாரிக்காது தூர இடங்களில் வைத்து உறவினர் தொடர்பின்றி வைத்திருத்தலும் இவ்வகையேயாம். வதையின் மூலம் ஒப்புதல் வாக்கு மூலம் பெறல் அல்லது வதையின் பின் மக்கள் முன் ஒருவரை தான் குற்றவாளி என அறிக்கையிட வைத்துத் தண்டனை வழங்கலும் மனித உரிமை மீறலேயாம். உரிய நேரத்தில் விசாரணைகளை மேற்கொள்ளாது நீண்ட காலம் தடுத்து வைத்தலும் மன்னிக்க முடியாத மனித உரிமை மீறலேயாகும்.

4. **மரண அறிவிப்பு:** ஒருவரின் மரணம் பற்றி அவரின் உற்றார் உறவினர் அறிகின்ற உரிமை அடிப்படை உரிமைகளில் ஒன்று. கொன்றுவிட்டு பல்வேறு காரணங்களுக்காக மறைத்து வைத்தல் அல்லது மறுத்தல் அல்லது நீண்ட காலத்தின் பின் மரணச் சான்று வழங்கல் என்பன மனித உணர்வுகளை புதைகுழியிட்டவர்களால் தான் செய்ய முடியும். மரணமானபின் ஒருவரின் உடலை உறவினர்களிடம் ஒப்படைக்காமல் தகனம் செய்தலும் உரிமை மீறலேயாம். உரியவர்கள் ஏற்க மறுக்கும் போது இது உரிமை மறுப்பாகாது.

5. **உண்மை அறியும் உரிமை:** நாடு முழுவதும் பொய் அறிக்கைகள் புழுத்துப் போய்விட்டதாலே உண்மையை அறிவது கல்லில் நார் உரிப்பது போன்றுள்ளது. மக்கள் உண்மை அறியும் உரிமையுடையவர்கள். பல்வேறு நிகழ்வுகள் பற்றி வெளிவரும் செய்திகள் அறிக்கைகளில் யார் சொல்வது உண்மை, உண்மைத் திரிப்புக்கள் எத்தனை, பொய் எத்தனை, உண்மை எத்தனை வீதம்,யாருக்காக என்ன நோக்கத்துக்காக இந்தச் செய்தி வெளியிடப்படுகிறது, உண்மையிலே நடந்தது என்ன வெளியே சொல்லப்படுவது என்ன என மக்கள் குழம்பும் நிலையைக் காண்கிறோம். உண்மையை அறிய மண்டையைக் குழப்ப வேண்டிய நிலையே தொடர்கிறது. பொய் கூறி அரசியல் லாபம் தேடும் முயற்சி பொய் நிறைந்த சந்ததியை உருவாக்கும் என்பதே உண்மை. சாணியால் மாளிகை கட்டமுடியாது - பொய்யால் நல்ல சமூகத்தையோ உண்மையான சுபீட்சத்தையோ விடுதலையையோ மக்கள் பெறமுடியாது. உண்மையே விடுதலையைக் கொண்டுவரும் என இயேசு கூறியதனை நினைவு கூர்வது நல்லது.

6. **மாற்றுக் கருத்துச் சுதந்திரம்:** மக்கள் நலன், சமூக வளர்ச்சி, ஆரோக்கியமான எதிர்கால சந்ததி உருவாக்கம், என்பவற்றைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தில் கொண்டு உண்மையை ஆய்ந்தறிந்து அறிவிக்கின்ற பத்திரிகைகள் கிடைக்க வாய்ப்பு கிடைப்பது மக்கள் உரிமை. சுயாதீனமாக, நடுநிலைமையோடு இயங்கும் பத்திரிகை பெற்று படிப்பது மக்களின் மறுக்க முடியாத உரிமை. மாற்றுக் கருத்துடைய எழுத்துக்கள் பேச்சுக்கள் அமுக்கப்படுவது அடக்கப்படுவது முதிர்ச்சி நிறைந்த எதிர்கால சமூகம் உருவாக அத்திவாரம் இடமாட்டாது. மாற்றுக் கருத்துக் கொண்டவர்களைத் தண்டிப்பது அழிப்பது அவர்கள் நடவடிக்கைகளுக்கு தடை போடுவது கருத்துச் சுதந்திரத்திற்கு சாவு மணி அடிப்பதாகும். மக்களுக்குக் கிடைக்கப் போவதாகக் கூறப்படும் விடுதலையோடு ஒட்டி நிற்க முடியாதது.தாம் இழைக்கும் அநீதி வெளியில் தெரிந்திடக் கூடாது என்று தணிக்கை முயற்சிகளில் ஈடுபடல் அல்லது மாற்றுக் கருத்துக் கொண்டு இயங்கும் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் தாக்கப்படுவது அல்லது ஆளுமைக் கொலைகளுக்குள்ளாவது அல்லது கொலை செய்யப்படுவது மாற்றுக்கருத்துரிமையை மீறுவதையே காட்டும். மாற்றுக் கருத்துள்ள பத்திரிகைகளின் விற்பனைக்கு தடை விதித்தல், விற்கும் கடைகளைத் தாக்குதல் போன்றவையும் உரிமை மீறலின் இன்னொரு வடிவமே.

7. **அரசியல் உரிமைகள்:** அரசியல் குழுவாக இயங்கும் உரிமை எவரதும் ஏகபோக உரிமையல்ல மக்களின் நலனுக்கு மாறாகச் செல்லாத வரையில் அந்த உரிமை மக்களால் அனுமதிக்கப்படக் கூடியது. எந்த ஒரு சாராருக்குமுள்ள இந்த உரிமையைக் கட்டுப்படுத்த மக்களுக்கு மட்டுமே உரிமையுண்டு. அதே போன்று தம் தெளிந்த அறிவோடும் மனச்சாட்சியோடும் எவ்வித பிற அழுத்தமுமின்றி வாக்களிக்கும் உரிமை மக்களிற்குரிய அடிப்படை உரிமை. தம்மை யார் ஆளவேண்டும் என்பதை நிர்ணயிக்கும் உரிமையும் மக்களுக்கே உரியது. இதை யாரும் தம் கையில் எடுத்துக் கொள்வது மக்களின் இந்த உரிமையை மீறலேயாகும். இதே போன்று தான் மக்களால் வாக்களிக்கப்பட்டு தகுதியானவர் தெரிவாவதும் மக்கள் உரிமை. கள்ள வாக்குகளை அள்ளிப்போட்டு தாம் விரும்புபவரை மக்களை ஆளப் பதவியிலிருத்த எந்த அரசியல் கட்சியோ குழுவோ முயல்வது மக்களின் அடிப்படை உரிமையை மீறுவதாகும். இது மக்களுக்குக் கேட்டையே கொண்டுவரும்.

8. **சிறுவர்களுக்கான உரிமைகள்:** 18 வயதுக்கு உட்பட்டவர்களைப் போரில் ஈடுபடுத்தக் கூடாது என்பது ஐ.நா.வின் அறிவுறுத்தல். இவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதில் சரி எது, பிழை எது, ஒரு செயலின் பரந்த விளைவு எவை என்று சிந்திக்கும் ஆற்றல், தனக்குப் பொருத்தமான அரசியல் தேர்வுகளை மேற்கொள்ளும் ஆற்றல் என்பன வளர்ச்சி அடையாத ஒரு பருவம். உணர்ச்சி ரீதியான சிந்தனைகளால் எடுபட்டுப் போகின்ற பருவம் இது. உணர்ச்சி ரீதியான அழுத்தங்களைப் பிரயோகித்து யுத்தங்களுக்குள் இழுப்பது அவர்களின் உரிமை மீறலே. இக்காரணங்களாலேதான் உலகின் பல்வேறு நாடுகளில் சிறுவர் உரிமை பற்றி பலமாகப் பேசப்படுகின்றது. சிறுவர்களின் உரிமைகளை இவ்விடயத்தில் மதிப்பது நல்ல ஆரோக்கியமான எதிர்கால சந்ததி உருவாக வழியமைக்கும் சிறுவர்களுக்கு கெட்ட உதாரணங்களாகத் திகழ்பவர்களின் கழுத்தில் எந்திரக்கல்லைக் கட்டி கடலில் போடவேண்டும் என்றுரைத்தார் இயேசு. அதாவது சிறுவர்களின் வாழ்வு நலம் பெறத்தடையாயிருப்பவர்களை உயிர்வாழ அனுமதிக்கக் கூடாது என்பது யேசுவின் கருத்து.

9. **பெண்களுக்கான உரிமைகள்**: பெண்கள் சுதந்திரம், சமத்துவம், உயிர் மானம் என்பவற்றுடன் வாழ உரிமையுடையவர்கள். வதை, வன்புணர்ச்சி, கொலை, உரிமை மறுப்பு என்பவற்றிற்கு இவர்கள் உள்ளாவது நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றது. இவர்களுக்கான உரிமைக்குரல் ஓங்கி ஒலிக்கவேண்டும்.

10. **பண்பாட்டு அம்சங்களைக் காக்கும் உரிமை**: ஒரு இனம் தன் சமய பண்பாட்டுச் சின்னங்களைப் பேணிக்காக்கும் உரிமையுடையது. ஆனால் யுத்தகாலச் சூழலையும் சமாதானச் சூழலையும் பயன்படுத்தி ஆதாரமற்ற சரித்திரச் சான்றுகளை முன்வைத்து இன்னொரு இனத்தின் இந்த உரிமையை அழித்து தமது சமய, பண்பாட்டு அமசங்களைப் புகுத்த முயல்வதும் அடிப்படை உரிமை மீறலாகும். இதே போன்றுதான் எந்த அரசியல் குழுவினரின் நினைவுச் சின்னங்களையும் அழித்தல் இவ்வகை உரிமை மீறல்கள் தான்.

11. **சமய வழிபாட்டு உரிமை**: தாம் வழிபட்ட தலங்களிலே வழிபாடுகள் நடாத்த மக்கள் விரும்பும்போது அவ்விடங்களில் தாம் குடியிருந்து கொண்டு பாதுகாப்பு எனும் பெயரில் அனுமதி மறுப்பதும் அவர்களுக்கு உரிமை மறுப்புத்தான். அதே போன்றுதான் வழிபடவிடப்பட்ட தலங்களிலே சாதியின் பெயரால் வழிபாடுகளிலே சமவாய்ப்போடு பங்குபற்ற மறுத்தலும் சமத்துவத்தோடு வழிபாடு செய்தல் சார்ந்த உரிமை மறுத்தலேயாகும்.



பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. தனியார் முதலீடு செய்யும் உரிமை: தன் வாழ்வுக்காக ஒரு தொழிலைச் செய்ய உரிமையுண்டு. ஆளுகிறவர்களின் நலன் பாதிக்கப்படும் எனும் காரணத்தால் தொழில் அனுமதி வழங்க மறுத்தல் அல்லது நேரடியான அல்லது மறைமுகமான அழுத்தங்களைக் கொடுத்தல் என்பனவும் உரிமை மீறல் தான்.

13. தனிச் சொத்துரிமை: சொந்த வீட்டில் வாழவும், தன் சொந்தக் காணியில் தொழில் செய்து பிழைக்கவும் எல்லோருக்கும் உரிமை உண்டு. நாட்டின் ஒரு பகுதியினரின் விருப்பை பூர்த்தி செய்ய இன்னொரு இனத்தின் இவ் உரிமையை மிதிப்பது நியாயம் அற்றது. மாற்று இனத்திடம் இவ்வுரிமைக்கு குரல் கொடுக்கும் அதே வேளை நம் மக்களின் இந்த உரிமையை நாமே மதித்து உதாரணமாகத் திகழ்வது நல்லதும் நீதி நிறைந்ததுமாகும். தனிநபருக்கு உரிமையான சொத்தை தன் மனைவியின் தவறான புத்திமதியைக் கேட்டு அபகரித்த ஒரு அரசன் இறைவனால் தண்டிக்கப்பட்டதாக பழைய ஏற்பாட்டில் ஒரு சம்பவம் உண்டு. தனி நபர் சொத்துக்களை அவர்களின் அனுமதி, விருப்பம் என்பன இன்றி அபகரிப்பது தமக்குக் பிடித்தவர்களுக்குக் கொடுப்பது அல்லது தம் தேவைகளுக்குப் பயன்படுத்துவது தனிச்சொத்துரிமைக்கு எதிரானதேயாம். கடவுளுக்கும் பொறுக்காது.

முடிவுரை:

தத்தம் இனங்களுக்காகவும் நாட்டு நலனுக்காகவும் யுத்தம் புரிவதாக நாட்டின் வெவ்வேறு வட்டங்களைச் சார்ந்தவர்கள் கூறிக் கொள்கிறார்கள்.கடந்த காலத்திலும் தற்போதும் மக்கள் உரிமைகள் எவ்வாறு மதிக்கப்பட்டது என்பதன் அடிப்படையிலேயே எதிர்காலத்தில் மக்களுக்குக் கிடைக்கப்போகும் விடுதலைச் சமூகம் எப்படி இருக்கும் அதில் மக்கள் நலன் எப்படி அமையும் என்பது பற்றி முற்கூறல்செய்ய முடியும். மக்கள் உரிமைகள் மறுக்கப்பட்டு உருவாக்கப்படும் விடுதலை முழுமையான விடுதலையாக அமைவது இயலாத காரியம். எந்த இனமும் நிம்மதியாக வாழவும் முடியாது போகும். உரிமை கேட்கும் அதே வேளை உரிமை மதிப்புச் செய்வதே கடவுள் திருவுளம். கடவுள் திருவுளம் மனிதன் மாண்போடும் ஹசுதந்திரத்தோடும் சமத்துவத்தோடும் வாழ அனுமதித்தலேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானத்தில் மதங்களின் பங்கு

*அருட்சகோ. பி.தே. யூட்தாஸ்*

முன்னுரை:

இந்து சமுத்திரத்தின் நித்திலம் (The Pearl of the Indian Ocean) எனப்பலராலும் அழைக்கப்படுவது இலங்கைத் தீவு ஆகும். பல் இனப் பல்மத மக்களை தன்னகத்தே கொண்டு செழிப்புற்று திகழ்ந்தது எம் நாடு. இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இயற்கை அமைப்பு பல மேற்கத்தைய நாடுகளைக் கவர்ந்ததன் விளைவாக வந்ததுதான் காலணித்துவ ஆட்சி ஆகும்.மிகவும் உயர்வான பண்பாட்டு அம்சங்களைக் கொண்ட மக்கள் எம்தீவில் வாழ்கின்றார்கள். மத நம்பிக்கையை உயர்வாக மதிக்கின்ற மக்களாக இவர்கள் காணப்படுகின்றார்கள். இவ்வகையில் நோக்குமிடத்து பௌத்தம், சைவம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய மதங்கள் மக்களால் பின்பற்றப்படுகின்றன. பெரும்பான்மைச் சிங்களவர்கள் பௌத்தர்களாகவும், பெரும்பான்மைத் தமிழர்கள் இந்துக்களாகவும் காணப்படுகின்றார்கள். கிறிஸ்தவம் இரண்டு இன மக்களையும் உள்வாங்கிய மதமாகத் திகழ்கின்றது.

எப்போது ஓர் தனிமனிதனின் அல்லது குழுமத்தின் உரிமை, சுதந்திரம் பறிக்கப்படுகின்றதோ அல்லது மீறப்படுகின்றதோ அங்கே பிளவு இருக்கும், பிரச்சினை இருக்கும்.இதன் வளர்ச்சியே காலப்போக்கில் போராக, பாரிய யுத்தமாக உருவெடுக்கின்றது. இத்தகைய பின்ணணியிலேதான் எமது நாட்டுப்பிரச்சினையை நாம் நோக்கவேண்டும். இருபதுவருடகால யுத்தம்தந்த காயங்கள் நாம் இப்போது சுவாசிக்கும் சமாதானக்காற்றினால் ஓரளவு குணமாகிக்கொண்டு இருக்கின்றது. எம் நாட்டைப் பொறுத்த வரையில் போரின் வளர்ச்சிக்கும் அதன் உக்கிரத்தன்மைக்கும் சில மதங்களின் சில பிரிவுகள் காரணமாய் இருந்திருக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. அதேவேளை சமாதான முயற்சிகளின் ஆரம்பத்திற்கும் வளர்ச்சிக்கும் மதங்கள் காரணமாக இருந்திருக்கின்றன, இருந்து வருகின்றன என்றால் மிகையாகாது.

சமாதானம்:

சமாதானம் என்ற சொற்பதத்திற்கு நாம் இலகுவாக வரைவிலக்கணம் கூறிவிட முடியாது. இப்பதமானது பரந்த பொருளைக் கொண்டது. விஞ்ஞான ரீதியில் இப்பதத்தை நோக்குபவர்கள் கூறுவார்கள் வன்முறையும் போரும் இல்லாத நிலை தான் சமாதானம் என்பர். இவ்வரைவிலக்கணம் ஓர் வரையறைக்கு உட்பட்டதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருசிலர் இன்னோர் படி மேலே சென்று வன்முறையை இரண்டு வகையாகப் பிரிக்கின்றனர். 1. தனிநபர் வன்முறை

2. சமூக வன்முறை

தனிநபர் வன்முறைக்குள் உடல்சார்ந்ததும், உளம் சார்ந்ததுமான வன்முறைகள் உள்ளடக்கப்படலாம். சமூகவன்முறைக்குள் பொதுவாக மேற்கொள்ளப்படும் வன்முறையையும் சமூகத்தின் ஒவ்வோர் படியிலும் அல்லது நிலையிலும் காணப்படும் வன்முறையைக் குறிப்பிடலாம்.இவை இரண்டும் இல்லாத நிலையே சமாதானம் என்பர் சிலர். இன்னும் சிலர் கலாச்சார வன்முறை பற்றியும் பேசுகின்றனர்.

சமாதானத்தின் அடிப்படைத்தளமாக மனிதர் அனைவரும் ஒருவர் ஒருவரில் தங்கியிருப்பதையும், ஒருவரோடு ஒருவர் இணைக்கப்பட்டு இருப்பதையும் கொள்ளலாம். எனவே சமாதானம் என்பது எம்மையும், எமது உலகையும், சக மனிதர்களையும் மதித்து அன்பு செய்வதிலும்; அந்த மதிப்பையும் அன்பையும் ஆழப்படுத்த நாம் கைக்கொள்ளும் நெறிமுறைகளையும், சிந்தனைகளையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது.

## மதம்:

மதம் என்கின்ற கருதுகோளை ஆய்கின்றபோது பின்வருமாறு விளக்கம் கொடுக்கலாம். மனிதனின் இருப்பிற்கு விடைதேடி, மனிதனின் இனம்காணலை வெளிப்படுத்தி மனித ஆன்மாவை ஆய்ந்து; மனிதருக்கும் மற்றைய மனிதருக்கும், மனிதருக்கும் மற்றைய சீவராசிகளிற்கும் பொருட்களிற்கும் இடையிலான தொடர்பை விளக்கக்கூடிய வழிபாட்டு, அடையாளங்களை உள்ளடக்கிய ஒழுங்குகளையும் நெறிமுறைகளையும் கொண்டுள்ள ஓர் அமைப்பே மதம் என வரையறுக்கலாம்.

1. இவ்வாறாக மதத்தை ஏற்றுக்கொள்கின்ற ஒருவர் தனக்குள்ளே ஆழமாகச் சென்று இறைவனின் இருப்பை அறிந்துகொள்ள முற்படுபவர். எமில் டூர்கேய்ம் என்ற சமூகவியல் அறிஞர் கூறுகின்றார். "தெய்வீகப் பொருட்களோடு தொடர்புடைய நம்பிக்கைகளையும் நடைமுறைகளையும் கொண்டு இணைக்கப்பட்ட ஓர் முறையே (Unified system) மதம் ஆகும்."

2. நிநியன் ஸ்மாட் என்பவர் தனது நூலிலே மதங்கள் கைக்கொள்ளும் ஏழுவகையான அணுகுமுறைகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்: கோட்பாடு, வழிபாடு, புராணம், அனுபவம், உணர்வு, ஒழுக்கம், சட்டம், சமூகம், உலகம். நிநியன் ஸ்மாட் மதம் என்பதற்கு சரியான வரைவிலக்கணம் கூறவில்லை. மாறாக. அவரது எட்டு வகை அணுகுமுறைகளும் ஒன்றாகச் சேர்ந்து சிறந்ததொரு வரைவிலக்கணத்தை தரக்கூடியது. இலங்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இலங்கையில் காணப்படும் கிறிஸ்தவ, இந்து, பௌத்த மதங்கள் கோட்பாட்டு ரீதியாக சமாதானம் சார்பாக என்ன கூறுகின்றன என்று ஆராய்வோம்.

### கிறிஸ்தவம்:

பரிசுத்த வேதாகமத்தின் பழைய புதிய ஏற்பாடுகளில் சமாதானம் பற்றிப்பல இடங்களில் குறிப்பிடப்படுள்ளது. பழைய ஏற்பாட்டில் 'சலோம்' என்னும் எபிரேயப் பதம் சமாதானத்தைக் குறித்துக்காட்ட பயன்படுத்தப்படுகின்றது. பாவத்தின் விளைவு பிளவு, அமைதியின்மை, போர், சாவு ஆக இருக்கின்றது. மீட்பு வரலாற்றை நாம் படிக்கின்ற போது இறைவன் படைப்பின் ஒருமைப்பாட்டையும் சமாதானத்தின் ஆட்சியையும் ஏற்படுத்த முயல்வதை நாம் காணலாம். இறைவாக்கினர் ஊடாக இறைவன் பழைய ஏற்பாட்டில் தனது திட்டத்தை வெளிப்படுத்துகின்றார்.

### அ. மிக்காவில் சலோம் 4:3-4

இப்பகுதி மிகவும் முக்கியமான ஓர் பகுதியாகக் காணப்படுகிறது. யாவே ஒருவரே சமாதானத்தை வழங்கவல்லவர். போரின் ஓய்வையும் சமாதானத்தின் ஆரம்பத்தையும் பற்றி இறைவாக்குரைக்கப்படுகிறது. இறைவன் நீதியுள்ள நடுவராக இருந்து நாடுகளிற்கு சமாதானத்தை வழங்குவார். போருக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் அனைத்தும் விவசாயத்திற்குத் தேவையான கருவிகளாக மாற்றப்படும். இவ்வாறு சமாதானத்தின் ஆட்சிபற்றி மிக்கா இறைவாக்குரைக்கின்றார்.

### ஆ. சமாதானத்தின் வேந்தன் எசாயா 9:6-7

மெசியாவின் வருகையோடு தீமை ஒழிக்கப்பட்டு நீதியும் சமாதானமுமே ஆட்சி செய்யும். நாடு செழிக்கும். மக்கள் எல்லோரும் சமாதானத்தை அனுபவிப்பார்கள். இப்பகுதி கிறிஸ்துவின் ஆட்சியை முன்னறிவிப்பதாக இருக்கிறது.

### இ. புதிய சமூகம் எசாயா 65:25

வர இருக்கின்ற புதிய ஆட்சியின் காலத்தை எசாயா முன்னறிவிக்கின்றார். அக்காலத்தில் அழுகையோ. துன்பமோ நாட்டில் இருக்காது. மக்கள் அனைவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றுமையாகவும் அமைதியாகவும் வாழ்வார்கள். ஆகக்குறைந்த வாழ்நாட்கள் நூறுவருடமாயிருக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய ஏற்பாட்டில்

பழைய ஏற்பாட்டில் குறிக்கப்பட்ட 'சலோம்' என்ற பதம் கிறிஸ்துவிலே நிறைவேறுவதை நாம் அறிகின்றோம். கிறிஸ்துவே சமாதானத்தின் செய்தியாக இருக்கின்கிறார். கிறிஸ்துவின் பிறப்பின் போது வானதூதர் மகிழ்ந்து பின்வருமாறு பாடுகின்றனர்.

" உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக! உலகிலே அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக!" லூக் 2:13-14

கிறிஸ்து பாவிப்பெண்ணைக் குணப்படுத்திய பின்பு "சமாதானமாகப் போ" (லூக்7:50)என்று கூறுகின்றார். சமாதானம் கிறிஸ்துவின் உயர்வான கொடையாக விளங்குகின்றது. கிறிஸ்து உயிர்த்தபின்பு சீடர்களுக்கு காட்சி கொடுத்த போது "உங்களுக்கு சமாதானம் உண்டாகுக," (யோவான் 20:19,21,26,) என்று வாழ்த்துகின்றார். கிறிஸ்து தனது சீடர்களை பணிக்கு அனுப்பும் போது சமாதானத்தின் தூதுவர்களாக வாழும்படி (மத் 5:9) அனுப்புகின்றார். மலைப்பொழிவிலே "சமாதானம் செய்வோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவர்" (மத்5:9) என குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறாக சமாதானத்தின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகின்றது.

## பௌத்தமதம்:

இலங்கையில் பெரும்பான்மை மக்களைக் கொண்டது பௌத்த மதம் ஆகும். கௌதம புத்தர் சமாதானம் பற்றி பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார். போர் இல்லாத நிலைபற்றி பல சிந்தனைகள் தரப்படுகின்றன. பௌத்தர்கள் உயிருள்ள, உயிரற்ற பொருட்கள் மீது ஒரே விதத்தில் காருண்யம் காட்ட வேண்டும். எனவே தான் பௌத்த குரு ஒருவர் மரத்தின் இளம் கொழுந்தைக் கூட கிள்ளி எறிவதை புத்தர் தடை செய்திருந்தார். புத்தபெருமானுடைய கருனணை இனம், மொழி, சாதி, சமயம் அனைத்தையும் கடந்ததாகக் காணப்பட்டது.

ஓர் போர்வீரன் தேவலோகம் போக முடியுமா? என்ற கேள்வி புத்தரிடம் கேட்கப்பட்ட போது அவர் அளித்த பதில் : யுத்தகளத்தில் இறக்கும் போர்வீரன் நரகலோகம் போகின்றான் என்பதாகும். இச் சிந்தனையை பௌத்தர்கள் மௌடீக சிந்தனை என்பர்; அதாவது யுத்தகளத்தில் இறப்பவர் ஒன்றில் நரகலோகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே ஒட்டுமொத்தமாகப் பார்க்கின்ற போது புத்தபெருமான் போர் அற்ற சமாதானச் சூழலை விரும்பினார் எனக் கூறமுடியும். இவை அனைத்தும் கோட்பாட்டு ரீதியாக இருந்தாலும், நடைமுறையில் நாம் காணும் பௌத்தம் வேறுபட்டதாக காணப்படுகின்றது.

இந்து மதம்

இந்துக்களின் புனித நூலான வேதங்களின் ஒரு பிரிவான உபநிடதங்களில் சமாதானம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. சமாதானம் என்ற கருத்திற்கு சாந்தி என்ற சமஸ்கிருதச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. உபநிடதங்கள் கூறும் சமாதானத்தை வெளியார்ந்த (external) சமாதானமாக எடுத்துக் கொள்ளமுடியாது. ஆனால் உள்ளார்ந்த (interior) சமாதானம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இவ் உள்ளார்ந்த சமாதானமானது இரண்டு வகையாக நோக்கப்படுகின்றது.

1. ஆத்மாவிற்கும் மனிதனுக்கும் இடையிலான சமாதானம்
2. மனிதனுக்கும் மற்றைய பொருட்களுக்கும் இடையிலான சமாதானம்.

மேற்கூறப்பட்ட இரண்டும் சீராகக் காணப்படுகின்ற போது வெளியார்ந்த சமாதானம் இயல்பாகவே பிறப்பெடுக்கின்றது.

நடைமுறையில் எவ்வாறு மதங்கள் சமாதானத்திற்கு பங்களிக்கின்றன என அலசுகின்ற போது பின்வரும் கருத்துக்களை நாம் அவதானிக்கலாம்.

எமது நாட்டு இனப்பிரச்சனை தலைதூக்கி கொடூரமாக முன்னெடுக்கப்பட்ட போது மதத்தலைவர்கள் சிலர் சமாதானத்திற்காக தொடர்ந்து குரல் எழுப்பிய வண்ணமாக இருந்தார்கள். மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளில் தம்மையும் ஒன்றிணைத்து மக்களின் முழுவிடுதலைக்காக உழைத்தார்கள்.

சமாதானத்தின் தேவையை வலியுறுத்தி பல சர்வமதப் பிரார்த்தனைகளும், பேரணிகளும் நாட்டின் பல பாகங்களிலும் முன்னெடுக்கப்பட்டன. பல மதங்களின் சார்பாக பல மகஜர்கள் அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டன. பௌத்தமதத் தலைவர்கள் பலர் கூடி நாட்டின் சமாதானத்திற்காக பாதயாத்திரை மேற்கொண்டார்கள். இந்நிகழ்வானது வரலாற்றில், சிறப்பான ஓர் திருப்பு முனையாக இருந்தது.

காலத்திற்கு காலம் சமாதான முயற்சிகள் வெற்றிபெற வழிபாடுகளும், ஊக்கப்படுத்தல்களும் இரு தரப்பினருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதத்தலைவர்களால் வழங்கப்பட்டு வருகின்றது. நாட்டின் வடக்கிலும் தெற்கிலும் வாழும் மதத்தலைவர்கள் சிறப்பான நிலையில் யதார்த்தத்தை அறிந்து கொள்வதற்கு பல இனணப்புப் பாலங்கள் மேற்கொள்ளப்பட்டன. தென்பகுதி மக்கள் தமிழர்களது பிரச்சினைகளை விளங்கிக் கொள்வதற்காக வடக்கிற்கு மதத்தலைவர்களின் வழிநடத்தலிலே அழைத்து வரப்பட்டார்கள். இங்கு வந்த பிற்பாடு போராட்டத்தின் உண்மைநிலையை அறிந்து கொண்டார்கள், ஓர் பரஸ்பர புரிந்துணர்வை இனங்களுக்கிடையில் ஏற்படுத்த மதங்கள் காரணமாயிருந்தன.

காலத்திற்குக் காலம் சமாதான முயற்சிகளில் உறங்கல் நிலை வருகின்ற போது மதங்கள் மக்கள் மத்தியிலும், தலைவர்கள் மத்தியிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தி, சமாதான முயற்சிகள் முன்னேற்றப் பாதையில் சீராகச் செல்ல மதங்கள் தமது பங்களிப்பை வழங்கி வருகின்றன.

*முடிவாக:*

ஒட்டுமொத்தமாக நோக்குமிடத்து மதங்கள் சமாதான முயற்சிகள் வெற்றி பெற உழைக்க வேண்டிய கடப்பாடு உடையனவாக விளங்குகின்றன. அவ்வாறு உழைக்கவில்லையாயின் மதங்கள் கொண்டிருக்கும் கோட்பாடுகள் பொருளற்றவை ஆகிவிடுகின்றன. பல மதங்கள் சமாதான முயற்சியின் உருவாக்கத்திற்கும், வளர்ச்சிக்கும் தம்மை அர்ப்பணித்து வருகின்றன. இலங்கை அரசியல் நிலைப்பாடுகள் பௌத்த சித்தாந்தத்தில் மையப்படுத்தப்பட்டிருப்பதால் பௌத்தமதம் சிறப்பானதொரு இடத்தை வகிக்கின்றது. எனினும் மதங்களின் ஈடுபாடு போதுமானதாகக் காணப்படுகின்றது என என்னால் கூறமுடியாது. இன்னும் அதிகமாக மதங்கள் தம்மை ஈடுபடுத்தலாம். உண்மையிலே பற்றுவைத்து, தமது கோட்பாடுகளை நிலைநாட்டி, மக்களின் மனிதத்தை மதங்கள் மதிக்க முற்படுகின்ற போது சமாதானம் விரைவிலே மலர்ந்திட முடியும்.

<u>அடிக்குறிப்பு</u>

1. M.S. John a Religion and the culture, Jeevadhara, July September 2001, of peace p.367
2. Emile Durkeim,(1915) .The Elementary forms of the Religious life, London: Allen and unwin , p.47
3. Ninian Smart, Dimensions of the sacred: An Anatomy of the World's Beliefs, London: Fontana Press,1996.
4. காமினி குமாரசிங்க, சமாதானத்திற்குப் புத்தர்காட்டிய வழி, கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக ஒப்புரவுப் பணியில் பொதுநிலையினர்

## (நேர்காணல்)

*இ.பெ.தயாபரன்*

மனிதன் தனித்து வாழ படைக்கப்படவில்லை. அவன் சமூகமாகவே வாழப் படைக்கப்பட்டவன். மனிதனுக்கு தன் இயல்பிலேயே சமூக வாழ்வு இன்றியமையாதது. மனிதரின் முன்னேற்றமும் சமூகத்தின் வளர்ச்சியும் ஒன்றின்மேல் ஒன்று சார்ந்திருக்கின்றன என்பது மனிதனின் சமூகப் பண்பிலிருந்து தெளிவாக விளங்குகின்றது. ஒரு மனிதன் எப்போது தனக்குள்ளே முரண்படுகின்றானோ அப்போது அவன் சமூகத்தோடு முரண்படுகின்றான். ஈற்றில் சமூகம் தனக்குள்ளே முரண்படுகின்றது.

ஒவ்வொரு மனிதனும் தனித்துவமான பண்பைக் கொண்டவன். இருப்பினும் எல்லோருடனும் ஒன்றித்து ஒற்றுமையாக வாழக் கடமைப்பட்டவன். ஆனால் எல்லையற்ற சுயநலங்கள், இறுக்கமான சமுதாய ஏற்றத்தாழ்வு கட்டமைப்புக்கள், நவீன யுகத்தின் தாக்கங்கள், கலாச்சார ஊடுருவல் போன்றன பல சமூக முரண்பாடுகளையும், பிளவுகளையும் ஏற்படுத்தி சமூகத்தை செயலிழக்கச் செய்கின்றன. ஆதிக்கிறிஸ்தவ சமூக வாழ்வில் காணப்பட்ட ஒரு பண்பைக்கூட அடையாளம் கண்டுகொள்ள முடியாதுள்ளது. முரண்பட்ட சமூகத்தை உருவாக்கி அதில் வாழும் நாம் ப்புரவை ஏற்படுத்த வந்த கிறிஸ்துவின் சீடர்கள், அடியார்கள் என்று எவ்வாறு சொல்ல முடியும்? எனவே சமூக ஒப்புரவு இன்று எமக்கு அத்தியாவசியமானது. அதற்காகப் பணியாற்றுவது எம் ஒவ்வொருவரினதும் பணி. பல சவால்கள் வந்தாலும் உறுதியுடனும், அர்ப்பணிப்புடன் பணியாற்றவேண்டும்.

சமூக ஒப்புரவு பணியில் பொதுநிலையினரின் பணி பற்றி பொது நிலையினர் சிலருடனான நேர்காணலின் கருத்துக்கள் சில

கேள்வி: இன்று சமூகத்தில் பிரிவினைகளும், முரண்பாடுகளும் நிறைந்து காணப்படுகின்றன இதற்கு காரணம் என்ன?

பதில்: சமூகம் என்பது ஒன்றாக வாழும் மக்கள் கூட்டம். ஒருவருக்கொருவர் உதவுவதற்காகவே சமூகம் ஏற்படுத்தப்படுகின்றது. இன்று சில குடும்பங்கள் ஒன்றாக ஒருவருக்கொருவர் உதவிசெய்து ஆதரவாக வாழ்கின்றார்கள். ஆனால் சில குடும்பங்கள் அருகருகே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்தாலும் ஒருவருக்கொருவர் உதவிசெய்யாது பல முரண்பாடுகளுடன் வாழ்கின்றனர். ஒரு சமூகத்தில் தனிநபர், குடும்பங்கள் மட்டும் இருப்பதில்லை இங்கு சமூக நிறுவனங்கள், பாடசாலை, வைத்தியசாலை, பொதுஇடங்கள், சமயநிறுவனங்கள், கோவில்கள், நிர்வாக காரியாலையங்கள் என்பனவும் காணப்படுகின்றன. எனவே இன்று சமூகத்தில் ஏற்படுகின்ற பிரச்சனைகளுக்கும் முரண்பாடுகளுக்கும் பின்வரும் காரணிகள் காரணமாக அமைகின்றன. சமூக அந்தஸ்து, பொருளாதார ஏற்றத்தாழ்வு, கல்வி ஏற்றத்தாழ்வு, இன, சாதி வேறுபாடு, சமயம் சம்பந்தமான முரண்பாடு, விட்டுக்கொடுக்காத மனப்பாங்கு, மது முதலிய தீயபழக்கவழக்கங்களுக்கு அடிமையாவது, இடம்பெயர்வு, வெளிநாட்டுமோகம், தொலைத் தொடர்பு சாதனங்கள் என்பவற்றைக் குறிப்பிட்டு கூறலாம்.

கேள்வி: சமூகப்பிரிவினைகள் சமூதாய வளர்ச்சியை எவ்வாறு பாதிக்கின்றன?

பதில்: தனிநபர்களையும், குடும்பங்களையும் உள்ளடக்கியதுதான் சமூகம். ஒரு தனிநபரின் பிரச்சினை குடும்பத்தை பாதிக்கும் குடும்பத்தின் பிரச்சினை சமூகத்தைப் பாதிக்கும். எனவேதான் மேற்கூறப்பட்ட பிரச்சினைகள் தனிநபர்களுக்கோ, குடும்பத்திற்கோ ஏற்படும் பட்சத்தில் அந்தச் சமூகம் முழுவதுமாகப் பாதிப்படையும். குடும்பங்களில் காணப்படும் உறவற்றநிலை, புரிந்துகொள்ளாத மனப்பாங்கு, விட்டுக் கொடுக்காத தன்மைகள் தீய பழக்கவழக்கங்களால் குடும்பங்கள் சிதைவுறுகின்றன. சிதைந்த குடும்பங்கள் உள்ள சமூகம் நிச்சயமாக சிதைவுற்றே காணப்படும். சமூகத்தில் ஒற்றுமை, கரிசனை, ஒருவருக்கொருவர் உதவும் மனப்பாங்கு, பிரச்சினைகளை தீர்ப்பதற்கான முன்னெடுப்புக்களில் ஆர்வம் காட்டுதல், கூட்டாகச் செயற்படல் என்பன இல்லாதபோது சமூகத்தில் அமைதி ஏற்பட வாய்ப்பே இல்லை. சுயநலம் உள்ள சமூகம் எவ்வாறு வளர்ச்சி பெறும்? ஒற்றுமையற்ற சமூகம் எவ்வாறு வளர்ச்சி பெறும்? தனதும், பிறரினதும் தேவைகளை பூர்த்தி செய்ய உழைக்காத சமூகம் எவ்வாறு வளர்ச்சி பெறும்? எனவே, பிரச்சினைகள் இருந்தாலும் பிரிவினை நிறைந்த சமூகம் வளர்ச்சி பெறமுடியாது. பிரிவினைகள் களையப்பட்டு ஒன்றுபட்ட மனப்போக்குடன் வாழும் குடும்பங்களை உள்ளடக்கிய சமூகம்தான் பூரண வளர்ச்சி பெறமுடியும்.

செல்வி M. பத்மசேகரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி: சமூகத்தில் பிரிவினைகளைக் களைந்து ஒப்புரவை ஏற்படுத்துவது ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய பணி ஏன்?

பதில்: இன்று சமுதாயம் பல பிரச்சினைகளை இட்டு பிரிவினைகளை வளர்த்து வருகின்றது. எமது திருச்சபையினுள்ளும் பல பிரிவினைகள். ஆனால் கிறிஸ்து ஒப்புரவுப் பணியை செய்யவே மனிதனாகப் பிறந்தார். தமது பாடுகள், மரணம், உயிர்ப்பினால் கடவுளையும் மனிதனையும், மனிதனையும் மனிதனையும் ஒப்புரவாக்கினார். எனவேதான் மலைப்பொழிவில் "அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர். அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்" *(மத்.5:9)* நாம் உண்மைக் கிறிஸ்தவர்களாக இருந்தால்தான் கடவுளின் பிள்ளைகளாக முடியும். எனவே தான் ஒப்பரவுப்பணி ஒரு கிறிஸ்தவனுடைய பணி. சாதாரண வாழ்வில் பல தரப்பட்ட அமைப்புக்களில், இடங்களில் அவன் வாழ்வதால் இலகுவாக இப்பணியை கிறிஸ்தவன் செய்யமுடியும்.

கேள்வி: இதுவரை காலமும் பொதுநிலையினரின் பங்களிப்பு இப்பணியில் எவ்வாறு எந்த நிலையில் மேற்கொள்ளப்பட்டன?

பதில்: பொதுநிலையினர் இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன் திருச்சபையின் அடிமட்ட உறுப்பினர் என்ற முறையில் பல செயற்பாடு களில் பங்கெடுக்க முடியாதவர்களாக இருந்தனர். தற்போது சமூகத்தின் பிரிவினைகளை களைந்து ஒப்புரவை ஏற்படுத்தும் பணியில் பொதுநிலையினர் ஈடுபடுகின்றனர். மேய்ப்புப்பணிச் சபை,. நீதி சமாதானக் குழுக்கள், அன்பியம் போன்ற அமைப்புக்கள் போன்றவற்றின் செயற்பாடுகள் சமூக ஒப்புரவுப் பணியில் ஈடுபடுகின்றன. இதில் பொதுநிலையினர் ஈடுபடுகின்றனர். பங்குகளில் சமூகப் பிரிவினைகள் ஏற்படுகின்றபோது நடுநிலை உள்ள சில பொதுநிலையினர் ஒப்புரவுப் பணியாற்ற தாமாக முயற்சி செய்து பணியாற்றுவதும் குறிப்பிடத்தக்கது.

கேள்வி: இப்பணி இனிவரும் காலங்களில் எவ்வாறு அமையலாம்?

பதில்: பொதுநிலையினரும் திருநிலையினரும் இறையரசின் பங்காளிகள் இருவரும் இணைந்து தான் ஒப்புரவுப்பணியை மேற்கொள்ளமுடியும், மேற்கொள்ள வேண்டும். சமூகப்பிரிவினைகள் ஏற்படக் காரணம் என்ன, ஏன் என்ற விடையங்களில் மக்கள் போதிய விளக்கங்களைப் பெற கருத்தரங்குகள் நடாத்தி தலைவர்களை உருவாக்கி இப்பணியைச் செய்ய பொதுநிலையினருக்குப் பயிற்சி அளிக்கவேண்டும். தாமாக விரும்பி இப்பணியில் செயற்படுபவர்களை ஆதரித்து ஊக்குவிக்க வேண்டும். நீதி சமாதான ஆணைக்குழு, பங்கில் சமாதானக் குழுக்கள்



பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவற்றில் பல பொதுநிலையினரை ஈடுபடுத்தி ஒப்பரவுப் பணியினை ஆற்ற வழிசெய்யலாம்.

ஆசிரியர் இ.ம.ஜெயசீலன்

கேள்வி: இன்றைய இளஞர்கள் நாளைய சமுதாயத்தின் தலைவர்கள் சமூக ஒப்புரவுப் பணிமட்டில் இவர்களது ஆர்வம் எப்படியுள்ளது?

பதில்: சாதாரணமாக ஒரு சமுகத்தில் மூன்று விதமான இளைஞர் குழுக்களை நாம் இனம் காணலாம்.

1வது குழு சமூகத்தின் மட்டில் செயல்நிலை அக்கறை
2வது குழு சமூகத்தின் மட்டில் செயல்நிலை அற்ற அக்கறை
3வது குழு சமூகத்தின் மட்டில் அக்கறையின்மை

சமூக ஒப்புரவில் ஆர்வமுள்ள இளைஞர் குழுக்களாக நாம் முதலிரு குழுக்களையுமே கூறமுடியும். சமகால சமூகங்கள் இளைஞரது கருத்துக்களை வரவேற்பதுடன் அவர்களது செயல்நிலை அக்கறையில் நம்பிக்கை கொண்டுள்ளன. இன்றைய இளைஞர்களின் பரந்துபட்ட அறிவு, தெளிந்த மனப்பாங்கு, முன்னெடுக்கும் திறமை, கூட்டுணர்வு என்பவற்றின் பின்னணியில் சமூக ஒப்புரவில் அதிக அக்கறை செலுத்தும் பகுதியினராக அடையாளம் காணப்படுகின்றனர். இயல்பு நிலையில் இளஞர்கள் துடிப்புள்ளவர்கள். எனவே சமூக முரண்பாடுகள் கருக்கொள்ளும்போது அவற்றை வளரவிடாது தடுப்பதில் இவர்களது பணியே முதன்மை பெறுகின்றது. மேலும் சாதி, மதம், வர்க்கம், இனம் போன்ற குறுகிய எல்லைகள் இளைஞர்களை கட்டுப்படுத்தி விடமுடியாத சூழ்நிலைகளை நாம் காணலாம். எனவே சமூக ஒப்புரவுப் பணியில் பாராபட்சமற்ற செயற்பாடுகளை அவர்கள் வெளிப்படுத்தி நிற்கின்றனர்.

நாமுண்டு நம் வேலையுண்டு என்ற மனநிலையுடன் செயற்படும் இளஞர்கள், சமூக முரண்பாடுகளுக்கு காரணமான இளைஞர்கள் சிலர் இருந்தபோதும் அதிகமான இளைஞர் இப்பணியில் ஈடுபடுகின்றனர். எனவே சமூகத்தின் வடுக்களில் அல்லது மனிதனின் எதிர் நடத்தையில் **(Deviant / Anti – Behavior)** ஏற்படும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு இன்றைய இளைஞர் அக்கறை காட்டுபவர்களாக விளங்குகின்றனர்.

கேள்வி: இவர்கள் எவ்வாறு தமது பங்களிப்பைக் கொடுக்கலாம்?

பதில்: 1. முதலில் இளைஞர்கள் தமக்குள் ஒப்புரவுடையவர்களாக திகழவேண்டும். தமக்குள் ஏற்படும் உணர்வு நிலையிலான, நடத்தையிலான குழப்பங்களுக்கும், முரண்பாடுகளுக்கும் தீர்வுகாணும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுமையுடையவர்களாக இருக்கும்போது தான் சமூக ஒப்புரவுப் பணியில் நிறைவைக் காணமுடியும்.

2. இளஞர்கள் தமது சமூகத்தின் மட்டில் விழிப்புணர்வுடையவர்களாகவும், சமூகப்பற்றுடையவர்களாகவும், அர்ப்பணிப்புடன் பொறுப்புக்களை ஏற்று பணியாற்றுபவர்களாக இருக்க முன்வர வேண்டும்.
3. முரண்பாடுகள் கருக்கொள்கின்ற போது குறுகியகால தீர்வுகளை விட நீண்டகால தீர்வுகளை முன்வைக்க முற்பட வேண்டும்.
4. முரண்பாடுகள் அதிகம் காணப்படும் சமூகங்களில் சிந்தனை ரீதியிலான மாற்றத்தை ஏற்படுத்த முயலவேண்டும். ஏனெனில் நடத்தை மாற்றத்திற்கு அடிப்படையாவது சிந்தனை மாற்றம்.
5. ஆற்றலுள்ள .இளஞர் சமூக ஒப்புரவு பற்றிய கருத்துக்கள் மக்களை சென்றடைய தொடர்பு சாதனங்களினுடாக தமது ஆக் கங்களை வெளிப்படுத்தலாம்.

செல்வி வி.அனுஷா

கேள்வி: பொதுநிலையினர் தமக்குரிய நிலையில் இருந்து ஒப்புரவுப் பணியில் ஈடுபடும்போது எத்தகைய சவால்களை சந்திக்கின்றனர்?

பதில்: உலகம் வாழ்வாங்கு வாழ உலகில் அமைதிநிலை பெறவேண்டும். அமைதியைக் குலைக்கும் சந்தர்ப்பங்கள், நிகழ்வுகள் அடிக்கடி தோன்றிய வண்ணமேயுள்ளன. இவற்றை மேற்கொண்டு அமைதிபேண ஒப்புரவுப்பணி அவசியமாகிறது. இப்பணியில் சகல மக்களும் ஈடுபடக்கடமை உண்டு. எனவே இப்பணி ஒரு சிலருக்கு மட்டுமே என ஒதுங்கி வாழ்வது தவறானது. ஓதுங்கி வாழ்வதற்கும் காரணங்கள் உண்டு. சவால்களை எதிர்கொள்ளத் தயக்கம், அதனை மேற்கொள் ளும் ஆற்றல் இல்லை என்னும் மனப்பான்மை எனும் இவை போன்ற பல காலம் மாறமாறப் புதுப்புதுச் சவால்களும் இப்பணியை எதிர் கொள்ளமுடியாதவாறு பெரும் தாக்குதல்களை உருவாக்குகின்றன. சமுதாய முரண்பாடுகளை சீர்செய்ய முற்படும்போது சில சந்தர்ப் பங்களில் மேலும் மேலும் முரண்பாடுகளை தோற்றுவிக்கின்றன. பெற்றோர் பிள்ளைகளை எதிர்கொண்டு நெறிப்படுத்த பின்னிற் கின்றார்கள். அவர்கள் தலைக்குமேல் வளர்ந்து விட்டார்கள். அதிகம் கற்றிருக்கிறார்கள் என்ற எண்ணத்தில் தம் கடமையைச் சரிவரப்புரிய முடியாதுள்ளது. எனவே ஏன் வீண்வம்பு என சமூக ஒப்புரவு நடவடிக்கை யில் ஈடுபடாது ஒதுங்குவோர் பலர் மற்றவனை திருத்தி நெறிப்படுத்த நான் யார் என பலர் எண்ணி ஒதுங்குகின்றனர். மேலும் பல சந்தர்ப்பங்களில் அவர்களின் இப்பணிநுழைவு பல விரும்பத்தகாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவங்களை கொடுக்கின்றன.

கேள்வி: இத்தகைய சவால்களை எவ்வாறு எதிர்கொண்டு ஒப்புரவுப் பணியில் ஈடுபடலாம்?

பதில்: எப்பணியிலும் சவால்கள் உண்டு. சவால்களை எதிர்கொள்ளும் போது வெற்றியும் தோல்வியும் சர்வசாதாரணம். வெற்றியின்போது வீறு கொள்ளாமலும் தோல்வியின்போது துவண்டு போகாமலும் இருப்பதே வேண்டற்பாலது. பொதுநிலையினர் அமைப்பு ரீதியாக, குழுமங்களாக ஒப்புரவுப் பணியில் ஈடுபடும்போது சவால்களை எதிர்கொள்வது மிகவும் இலகுவானது. பிரச்சினைகளை அணுக, தகுந்த தகைமை பெறவேண்டும், நல்ல அணுகுமுறையைக் கையாளவேண்டும், எந்த நல்லதொரு குறிக்கோளும் பிழையான அணுகுமுறையால் எதிர் மறையான விளைவுகளைக் கொடுக்கும். எனவே சரியான நோக்கம், நல்ல அணுகுமுறையும் எந்தச் சவாலையும் மேற்கொள்ளவும் நம்மத்தியில் ஒப்புரவை நிலைநிறுத்தவும் உதவும். சுருக்கக்கூறின் கிறிஸ்தவ விழுமியங்களை வாழப் பழகினால் எந்தச் சவாலையும் வெற்றியுடன் மேற்கொள்ளலாம்.

**ஆசிரியர் A.அகஸ்ரின்**

"எல்லோரும் ஒன்றாய் இருப்பார்களாக, தந்தையே நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக" (யோவான் 17:21). இறைவனோடும், மனிதனோடும் எம்மை ஒப்பரவாக்க வந்த இயேசுவின் அடியார்களாகிய நாம் எம் சமூகத்திலுள்ள முரண்பாடுகளையும், பிரிவுகளையும் அகற்றி ஒப்புரவை, ஒன்றிப்பை ஏற்படுத்துவது எம் பணியும், கடமையுமாகும். அப்போதுதான் நாம் கிறிஸ்து எம் சமூகத்தில் வாழ்வதை கண்டுகொள்ளமுடியும். நமக்கேது வீண்வம்பு அது திருச்சபை வழிகாட்டிகளினுடைய கடமை என்று சமூக ஒப்புரவுப் பணியிலிருந்து ஒதுங்காது எல்லோரும் இணைந்து பணியாற்றுவோம். ஒப்புரவினூடாக நாமெல்லோரும் ஒன்றாகி இறையரசுக்கு சான்று பகருவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்தந்தை A.I.பேனாட்

# போரில் சிறுவர்களின் பாதிப்பு

"சிறுவர்கள் முழுமையான உடல், உள வளர்ச்சி பெறாத அநாதரவாளர்கள், பாதிக்கப்படக் கூடியவர்கள் என்பதால், அவர்களுக்கு விசேட பாதுகாப்பும், பராமரிப்பும் அவசியம்."

இக்கூற்று, "சிறுவர்களின் உரிமைகள் பற்றிய சமவாயம்" என்னும் ஐ.நா ஆவணத்தின் முன்னுரையிலிருந்து எடுக்கப்பட்டது.

சிறுவர்கள் இயல்பாகவே அநாதரவாளர்கள் இலகுவில் பாதிக்கப்படக் கூடியவர்கள். தாமாகவே தமது தேவைகளைப் பூர்த்திசெய்யமுடியாதவர்கள் உயர்விற்கும் விருத்திக்கும் பிறரிலேயே தங்கியிருப்பவர்கள். இக்காரணத்தால்., யுத்த சூழலில் இவர்கள் பீடிக்கப்படும்போது, மிகவும் மோசமான முறையில் பாதிக்கப்படுகின்றனர். இவர்களுடைய வாழ்க்கைக்கு அர்த்தம் கொடுக்கும் கட்டமைப்புக்களான வீடு, குடும்பம், பாடசாலை, சுகாதார சேவை, சமய நிறுவனங்கள் போன்ற அமைப்புக்கள் யாவும் சிதைக்கப்படுகின்றன. இதன் விளைவாக பல வழிகளில் - உடல், உளம், மனவெழுச்சி, தார்மீகம், கலாச்சாரம், மானுடம் - போன்ற பல ரீதிகளிலும் பாரிய பாதிப்புக்கு உள்ளாகி, எப்போதும் பல நெருக்கடிகளையும், அச்சுறுத்தல்களையும் எதிர் நோக்க வேண்டியவராகின்றனர். வாழ்க்கை ஒரு பயங்கரக் கனவாக மாறுகின்றது.

## இடப் பெயர்வு:

யுத்தம் வெடிக்கும்போது அல்லது உரக்கும்போது ஏற்படும் பீதி ஒருபுறம். பதுங்குக்குழி தரும் பாதுகாப்பை நம்பியிருப்பதா, இடம் பெயர்ந்து ஓடுவதா என்று தீர்மானம் எடுக்க வேண்டிய பெரியவர்களின் அங்கலாய்ப்பு மறுபுறம். இவற்றை சிறுவரும் தமது வளர்ச்சிக்கேற்ப உணரத்தவறுவதில்லை. ஓடும்போது கைவிடப்படும் வீடு, நிலபுலம், சொத்து, இசைவாக்கம் பெற்றிருந்த சூழல், அயல், சமூகவலைப்பின்னல்கள் - இவற்றையெல்லாம் இழந்து ஓடுகின்றோம் என்ற பெரியோரின் கசப்புணர்வும் சிறியவர்களுக்கு தொற்றாமல் விடுவதுமில்லை.

இடம்பெயர்ந்து ஓடும்பொழுது, வெயில், மழை, உணவு மற்றும் குடிநீர் ஆகியவற்றிற்குத் தடடுப்பாடு, வீடின்மை போன்ற கஷ்டங்களை சமாளிப்பதற்கு வளர்ந்தோரிடமுள்ள பக்குவமோ, சக்தியோ சிறாரிடமில்லை. அவை பெரும் பாரமான பழுக்களாகவே அவர்களை அமுக்குகின்றன.

புலம் பெயர்ந்து மேற்குநாடுகளுக்கு அகதிகளாய் தப்பியோடியவர்களை விட, உள்நாட்டில் வேறிடங்களில் தஞ்சம் தேடியவர்களின் நிலை பல வழிகளில் மோசமானது. அங்கு, பொதுவாக, பலவித வசதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்படுகின்றன. இங்கு, மாறாக, யுத்த சூழலின் காரணமாக மட்டுமல்ல திட்டமிட்டபடியும் வசதிகள் மறுக்கப்படுவதுண்டு. வெவ்வேறு பகுதிகள் சமர்க்களமாக்கப்படும் போது அங்கிருந்தெல்லாம் மக்கள் இடம்பெயரவேண்டியதன் காரணமாக சிலர் பல தடவைகள் இவ்வாறு ஓடித்தப்பவேண்டியுள்ளது. உதாரணமாக வடபகுதியில் சில குடும்பங்கள் பதின்மூன்று தடவை இடம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு முறையும் தாம் சேகரித்த உடமைகளையும் விட்டுவிட்டு ஓடவேண்டியுள்ளது.

## பொருளாதார அழிவும், பொருளாதாரத்தடையும்:

கண்மூடித்தனமான குண்டுவீச்சுக்கு குறிப்பிட்ட இலக்கு இல்லை. பயிர்கள், பயிர்நிலங்கள், தொழில் உபகரணங்கள், பண்ணைகள், தொழிற்சாலைகள் போன்ற பொருளாதார வளங்கள் யாவுமே தாக்குதலுக்கு இலக்காகின்றன. குடும்பவருமான வீழ்ச்சி ஒருபுறம், விலைவாசி உயர்வு மறுபுறம்.

இவற்றால் விளையும் பாதிப்புக்களை அதிகரிக்கும் வண்ணம் திட்டமிட்ட பொருளாதாரத்தடைகளும் ஏற்படுத்தப்படுகின்றன. யாழ்குடாநாட்டைப் பொறுத்தவரையில், மீன்பிடித்தடை 1985ஆண்டில் அமுல்செய்யப்பட்டது. அத்தடைகள் இற்றைவரை முற்றாக நீக்கப்பட்டதாயில்லை. பின்னர், இராணுவ நோக்கங்களுக்கு ஏதுவான பொருட்கள் மீதான தடை என்ற போர்வையில் மருந்துவகை, உணவுவகை, பாடசாலை உபகரணங்கள் போன்ற பலவிதமான பொருட்கள் மீது தடைவிதிக்கப்பட்டதால் சிறுவர்களின் உயர்வுக்கும், விருத்திக்கும் பெரும்பாதிப்பு ஏற்பட்டது.

## உய்வு: சுகாதாரமும் சத்துணவும்.

மேற்கூறப்பட்ட காரணங்களால் சிறுவர்களின் உயர்வு பெரிதும் பாதிக்கப்பட்டு, இறப்பு விகிதாசாரம் அதிகரிக்கின்றது. பொதுவாகவே சுகாதார சூழல் மோசமாயிருக்கும் நிலையில், அதற்குத்தேவையான குளோறின் போன்ற பொருட்களின் தட்டுப்பாடு காரணமாகவும், தடுப்புமருந்துகள் தடைபட்டதன் காரணமாகவும், அசுத்தமான நீர், கால்வாய்கள் போன்றவற்றால் பரவும் நோய்கள் அதிகரிக்கின்றன. சத்துணவுக்குறைவால் விளையும் பெலவீனம் சிறுவர்களை நோய்களுக்கு இலகுவான இலக்காக்குகின்றது.

சுகாதார, மருத்துவ சேவைகளில் ஏற்படும் தாக்கமும் குறிப்பாக சிறுவர்களில் பிரதிபலிக்கப்படுகின்றது. உயிரிழப்பு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கவீனராதல், இடம்பெயர்வு போன்ற காரணிகளின் நிமித்தம் இச்சேவைகளில் ஆளணிப்பற்றாக்குறை ஏற்படுகின்றது. வெற்றிடங்களை நிரம்பும் முயற்சி தாமதிக்கப்படுகிறது. தரமுள்ள மனிதவளமின்மை மட்டுமல்ல இதற்குக்காரணம். சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் இது திட்டமிட்டும் செய்யப்படுகின்றது. குறிப்பாக இனவழிப்பு மேற்கொள்ளப்படும் யுத்தசூழல்களில் இது நிகழ்கின்றது.

விருத்தி: கல்வி

சிறுவருடைய வளர்ச்சியின் பல பரிமாணங்களில் அறிவுவளர்ச்சி முக்கியமானதொன்று. அது யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்படுகிறது. பாடசாலைக் கட்டடங்கள் சேதமுறுகின்றன. சில முற்றாக அழிக்கப் படுகின்றன. ஆசிரியர்கள், பாடசாலை உபகரணங்கள் ஆகியவற்றில் பற்றாக்குறை ஏற்படுகின்றது. மரங்களின் கீழ், வெறும் தரையிலிருந்து கற்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கும் சிறுவர் தள்ளப்படுகின்றனர்.

இடப்பெயர்வால் மாறிக்கொண்டிருக்கும் சனச்செறிவு பல நெருக்கடிகளை உருவாக்குகிறது. 1988ம் ஆண்டு, கிளிநொச்சியிலிருந்த 76பாடசாலைகளில், அங்கு இடம்பெயர்ந்து சென்ற வேறு 26பாடசாலைகள் இயங்க வேண்டி இருந்தது. 5,922 மாணவர்களைக் கொண்டிருந்த மன்னாருக்கு, இடம்பெயர்ந்த 4,692 மாணவர்கள் சென்றனர். ஆனால் வளங்களெதுவும் அதிகரிக்கப்படவில்லை.

யாழ் குடாநாட்டில் 1998ம் ஆண்டின் முடிவில் எடுக்கப்பட்ட தரவுகளின்படி, 18 வயதிற்குக் குறைந்த சிறுவர்களில் பாடசாலைக்குச் செல்லாதவர்கள், மொத்த எண்ணிக்கையில் 6.2%. குறைந்த அல்லது ஒழுங்கீனமான வரவு 5.4%. இதற்கு முக்கிய காரணம் யுத்தத்தினால் குடும்பத்தில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியாகும்.

சிறுமிகள்:

போர்க்காலத்தில் பெண் சிறுவர்கள் பாலியல் வல்லுறவுக்கும் பலவிதமான பலாத்காரங்களுக்கும் இலக்காகும் வாய்ப்பு அதிகமாயுண்டு. குறிப்பாக, அனாதரவான சிறுமிகள் தம்மைப் பாதுகாக்க முடியாத நிலையிலுள்ளனர். அகதிமுகாம்களிலுள்ள சிறுமிகள் பாலியல் வல்லுறவுக்கும், துன்புறுத்தலுக்கும் உள்ளாக்கப்படும் ஆபத்து பரவலானது.

இத்தகைய பலாத்காரம் ஓர் இராணுவ ஆயுதமாகவும் பாவிக்கப்படுகிறது. உதாரணமாக மக்களையும், எதிரிகளையும் ஏளப்படுத்துவதற்கும், அச்சுறுத்துவதற்கும் ஆயுதமாகப் பாவிக்கப்படுகின்றது. சில நாடுகளில், இராணுவத்தினரின் விபச்சாரத்திற்கு அவர்கள் பலவந்தமாக ஈடுபடுத்தப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீகம்:

மதத்தலங்களும், மதரீதியிலான குழுமங்களும் அழிவையும், சிதைவையும் சந்திக்கின்றன. தமிழ்ப்பிரதேசத்தில் ஏனைய கட்டடங்களைப்போன்று, கோவில்கள், ஆலயங்கள் போன்றவை விதிவிலக்கின்றி சேதத்துக்குள்ளாகின்றன. பெரிதும் நிறுவனமயமாக்கப்பட்டு நிருவாகமும், ஒருங்கிணைப்பும் வளர்ந்துள்ள மதங்களைச் சேர்ந்த மக்கள் தமது ஆன்மீகச் செயற்பாடுகளை ஓரளவு பேணக்கூடியதாயிருக்கலாம். ஆனால் அத்தகைய மதங்களைச் சேராத சிறாரின் ஆன்மீக வளர்ச்சி மந்தமடைகிறது.

“முழுநிறைவடையும் மனிதமே இறைவனுக்கான மகிமை” என்ற கூற்றை எடுக்கும் போது மானுடத்தின் பல பரிமாணங்களிலும் பாதிப்படையும் சிறாரின் ஆன்மீகம் என்ன நிலையிலிருக்கும்.

முடிவாக:

இன்று இலங்கையுட்பட முப்பதுக்கு மேற்பட்ட நாடுகளில் ஆயுத முரண்பாடு இடம்பெறுகின்றது. பல ஆண்டுகளாக நீடித்துக்கொண்டே போகிறது. இந்நிலையில் எத்தனையோ சிறுவர்கள் தமது வாழ்வில் “சிறுபராயம்” என்ற கட்டத்தை யுத்த சூழலிலேயே கழிக்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர். அதாவது வெறுப்பு, அச்சம், அங்கலாய்ப்பு என்ற விலங்குகளொன்றும் இல்லாது சுதந்திரப்பறவைகளாக சிறகடித்துப் பறக்கும் சிறுபராயத்தினது சுதந்திரத்தின் இனிமையை சுவைக்கும் பாக்கியம் மறுக்கப்பட்டுள்ளனர். சில வேளைகளில், பெற்றோர்க்கு ஏற்பட்ட பாதிப்பின் நிமித்தம், சிறுபராயத்திலேயே குடும்பத்தைப் பராமரிக்கும் பொறுப்பை பெரியோரைப்போன்று சுமக்கவேண்டிய பரிதாப நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

ஆக, சிறுவர் உரிமைகள் சமவாயத்தில் பொறிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு உரிமையையும் மீறி நிற்கின்றது யுத்தம்.

நீதியான போருக்கு இருக்கவேண்டிய மூன்று முக்கியமான காரணிகள்: நீதியான காரணம், சட்டரீதியான அதிகாரம், தூய கருத்து அல்லது குறிக்கோள் ஆகும்.

புனித அக்குயினால் தோமையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித அல்போன்ஸ் லிகோறியார்
# (1696 - 1787)

அருட்சகோ . அ . கொன்பியூசியஸ்(அ.ம.தி.)

## பிறப்பும் அழைப்பும்:

நேப்பிள்ஸ் நகரில் வாழ்ந்து வந்த ஒரு உத்தம கத்தோலிக்க தம்பதிகளுக்கு முதலாவது மகனாக புனித அப்போன்ஸ் லிகோறியார் 1696ம் ஆண்டு பிறந்தார். தனது 26வது வயதுவரையும் மிகுந்த நாவன்மையை அருட்கொடையாகக் கொண்டஒரு வழக்கறிஞராக பணியாற்றிக்கொண்டிருந்தார். இவர் இறைவன் பாலும், அயலவர் பாலும் கொண்ட அன்பினால் உந்தப்பட்டு நோயாளர்களைத் தரிசிக்க வைத்தியசாலைகளிற்கும் சென்று கொண்டிருந்தார். இவ்வாறாக கடந்து சென்றுகொண்டிருந்த அவருடைய வாழ்வில் ஒரு நாளிலே, "உலகத்தை விட்டு விட்டு உன்னை எனக்கு கொடுத்துவிடு" என்ற அழைத்தலின் குரலை அடிமனதின் அமைதியில் உணர்ந்தார். தந்தையின் விருப்பமின்மையின் மத்தியிலும் இந்த வழக்கறிஞர் ஒரு கத்தோலிக்க குருவானார்; மிகச்சிறப்பாக வாழ்ந்து இறைவனின் ஒரு உன்னத சாட்சியுமானார்.

## ஒரு சிறந்த மறைபோதகராகவும், பாவமன்னிப்பு குருவாகவும்:

குருத்துவப் பணியின் ஆரம்பத்திலே ஒரு சிறந்த மறைபோதகராக விளங்கினார். நேப்பிள்ஸ் நகர் பூராகவும் அதனை அண்டிய பகுதிகளிலும் மறைபோதகம் செய்தார். தன்னுடைய எளிமையான ஆனால் மிகவும் சாதுரியமான பிரசங்கங்களால் பாமர மக்கள் பலர் இறைவனை சுவைக்கவும், அவரைத்தேடி வாழ்வு பெறவும் தூண்டினார். மேலும் இவர் தன்னிடம் பாவமன்னிப்பு அருட்சாதனம் பெற வந்தவர்களை மிகவும் அன்போடும், இரக்கத்தோடும் ஏற்று ஆசீர் வழங்கினார். இப்புனிதரிடம் இவ் அருட்சாதனத்தைப் பெற எப்பொழுதும் மக்கள் நிறைந்து வந்தார்கள் என்று கூறப்படுகின்றது.

## ஒரு சிறந்த ஆயராகவும், துறவற சபை நிறுவுனராகவும்:

பதின்மூன்றாம் கிளமன்ற் பாப்பரசரின் அழைப்பினை ஏற்று புனித அகத்தா டி கொடி (Sant Agata dei Goti)



நூலகம் யாழ்ப்பாணம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற மறைமாவட்டத்தின் ஆயராகி அயராது உழைத்தார். குருமாணவர்களையும் குருக்களையும் மிகச் சிறந்த வழியில் பயிற்றுவித்தார். மேலும், நேப்பிள்ஸ் நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் காணப்பட்ட தீய வாழ்வை அகற்ற தூய இரட்சகரின் சபை (The Institute of the most Holy Redeemer) என்ற துறவற சபையை 1732ம் ஆண்டு ஸ்தாபித்தார். பல எதிர்ப்புக்கள், அரச அதிகாரிகள் சிலரின் ஆதிக்கத் தலையீடுகள் மத்தியிலும் இறை சித்தத்தை உய்த்துணர்ந்து இச்சபையை வழிநடத்தினார். இன்றும் கூட எமது நாடு உட்பட உலகின் பல நாடுகளிலும் இச்சபை பணிபுரிவதை நாம் காணலாம்.

## அறநெறி இறையியல் தந்தையாக:

இவர் மிகவும் பிரசித்தி பெற்ற இறையியலாளர்களில் ஒருவர் ஆவார். தன்னுடைய குருத்துவ வாழ்வின் பெரும்பகுதியை எழுத்துப் பணியில் செலவிட்டார். அறநெறி இறையியல், கோட்பாட்டு இறையியல், ஆன்மீகம், பக்தி, செபம் போன்றவை பற்றி அதிகமாக எழுதினார். அதிலும் முக்கியமாக இவர் அறநெறி இறையியலுக்கு ஆற்றிய எழுத்துப் பணியால் மிகவும் நினைவு கூறப்படுவதுடன் இன்றும் "அறநெறி இறையியலின் தந்தை" என புகழப்படுகின்றார்.

தான் போதித்து வந்த திருச்சபையின் போதனைகளையும், படிப்பினைகளையும் மிக எளிமையாக தனது முதலாவது பதிப்பாகிய அறநெறி இறையியல் (Moral Theology) என்ற நூலில் 1748ல் வெளியிட்டார். மனித நடத்தையில் ஐயம் நிலவும் வேளைகளில் எவ்வாறு ஒருவர் சரியான பகுத்தறிவுடன் அறநெறிகளை கடைப்பிடிக்க வேண்டும் என்பதை Equiprobabilism என்ற கோட்பாட்டில் விளக்கினார்.ஒரு சட்டம் அல்லது விதிமுறை செயலிழக்கும் சந்தர்ப்பங்களில் அதைவிட சற்று கடினமான விதிமுறை கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்றும், ஒரு சட்டம் அல்லது விதிமுறை நடைமுறையில் இருந்ததா என்று ஜயம் எழும் வேளைகளில் அதைவிட சற்று மிதமான விதிமுறையைக் கடைப்பிடிக்கலாம் என்றும் கூறி இதனை மிகத் துல்லியமாக விளக்கினார். இதன் ஊடாக அறநெறி இறையியலுக்கு மிகவும் பாரிய பங்களிப்பையும் செய்தார்.அத்தோடு, இந்நூலில் ஜ(ா)ன்சனிசத்தின் (Jansenism) தீய கொள்கைகளையும், அரசியல் வாதிகளின், துறவறத்திற் கெதிரான கொள்கைகளையும் மிகவும் கடுமையாகவும் எதிர்த்தார்.

தேவதாயின் மீது அளவற்ற பக்தி கொண்ட இவர் மரியாளின் மாசில்லா உற்பவத்தின் கோட்பாட்டை மேலும் உறுதிப்படுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ் மிகுந்த "மரியாளின் மகத்துவம்" (The Glories of Mary) என்ற நூலை 1750ல் எழுதி வெளியிட்டார். இந்நூலின் ஊடாக மரியாளின் பக்தி முயற்சிகளை மென்மேலும் மக்கள் வாழ்வில் தூண்டினார்.

மேலும் பல செப,தவ, பக்தி நூல்களையும் இவர் எழுதி கத்தோலிக்க திருச்சபையின் இறையியலையும், கோட்பாடுகளையும், ஆன்மீகத்தையும் மிகவும் ஆழப்படுத்தினார். இவர் எழுதிய நூல்களில் மிகவும் முக்கியமாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

(1) நற்கருணை சந்திப்பு (Visit to the Blessed Sacrament)
(2) குருத்துவமும் துறவறமும் (Priesthood and Religioushood)
(3) சிலுவைப் பாதை (The Way of the Cross)
(4) கிறிஸ்து இயேசுவின் உண்மையான மணவாளன்/மணவாட்டி (The true Spouse of Jesus Christ-அருட்தந்தையருக்கும் அருட்கன்னியர்களுக்கும் எழுதப்பட்ட இரண்டு நூல்கள்)

## நிறை அமைதியில்:

தன்னுடைய உன்னதமான வாழ்க்கையின் இறுதிக்காலத்தில் நோய்வாய்ப்பட்டு 1787ம் ஆண்டு ஆவணி 1ம்நாள் இறைவனின் அமைதியில் இளைப்பாறினார். பரிசுத்த திருச்சபையால் 1839ல் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்டார். பின்னர் 1871ல் திருத்தந்தை ஒன்பதாம் பத்திநாதர் இவரை திருச்சபையின் மறைவல்லுனர்களுள் ஒருவர் என்று பிரகடனம் செய்தார்.

அமைதி என்றால் போர் நிகழாதிருக்கும் நிலைமை மட்டுமல்ல; ஒன்றையொன்று எதிர்த்து நிற்கும் சக்திகளுக்கிடையே ஒரு சம நிலையைக் கொணர்வதிலும் அமைதியை அடக்கிவிட முடியாது; அடக்கியாளுகின்ற ஆட்சிமுறையிலிருந்து பிறப்பதன்று அமைதி, மாறாக அமைதி என்றால் "நீதியால் விளைவது" ஆகும்.

இரண்டாம் வத்திக்கான் சங்க
இன்றைய உலகில்திருச்சபைக் கொள்கைத்திரட்டு (78)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SYNOPSIS

# Peace of the Risen Jesus

Peace is a current issue and is the most spoken word all over . In the fast moving world of today with lots of conflicts and wars nationally and internationally in spite of scientific and technological advancement, peace is one of the key words that people pronounce often and which they thirst for . Peace is an essential and basic element for man's happy life on earth. This peace cannot be sought in worldly things like wealth, power, food and drink and other bodily needs, as some people think.

The ultimate peace is found only in Jesus Christ, the Risen Lord. He can only give peace to our minds and hearts. Peace is personified in Jesus,. Wherever he went, whoever he met , he greeted he said these words, " peace be with you" and whenever he healed the sick and forgave the sinners he said to them, " go in peace." He also commanded the disciples to do so. Jesus' apparent embrace of and approach towards the poor, oppressed and suppressed, marginalized, the sinners and prisoners brought peace to them. Further, reconciliation is one of the fruits of peace of the Risen Lord.

Peace is also the absence of evil, enmity, war and conflicts. Therefore let us follow Jesus christ as our model, be instrumets of peace that the world connot give, and build up a new society.

**Sr.Lumin**

# THE JUST WAR THEORY

One of the perennial realities of human existence is war. From the earliest recorded events of human history all the way through to modern times, human communities have engaged in armed conflict as a method of dispute resolution. While war has been a constant part of human experience, there has also been a tendency within



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

virtually all human civilizations to limit the extent of war and the methods by which warfare may be conducted. In this process of thinking the just war theory emerged in the western moral, legal and political area as a means to evaluate the legitimacy of military action.

This theory has both the religious and secular sources. St. Augustine was the first major Christian theologian to lay a strong foundation to this theory and it was consolidated by St. Thomas Aquinas. It is from St. Augustine and St. Thomas Aquinas that the theory of just war is adapted and expanded by later thinkers. The secular sources for just war theory span a considerable length of time. They include such philosophers as the ancient Roman Cicero and the Dutch Protestant Hugo Grotius. In addition, the modern decrees on justifiable warfare, such as the commission to the Nurenburg War Crimes Tribunal, and the United Nations charter also act to flush out the modern conception of just war theory.

So with the contribution of the religious and secular sources the just war theory took the final shape. According to this theory for a war to be just, it must have the following conditions:

A just war can be waged as a last resort.

A war is just if it is waged by a legitimate authority.

A just war can only be fought to redress a wrong suffered.

A war can be just if it is fought with a reasonable chance of success.

The ultimate goal of a just war is to re-establish peace.

The violence used in the war must be propositional to the injury suffered.

The weapons used in war must discriminate between combatant and non-combatants.

Therefore this theory provides room only for a defensive war and the offensive war cannot be in any way justified by this theory.

**Rev. Fr. M. David**



பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HUMAN RIGHTS DURING WAR

The situation of war calls for serious considerations about different human rights experiences. During war politicians should respect people's rights to know God's will and that will, being implemented in the political arena. Negligence of this right will have unforeseeable long term negative consequences. And those who cry for the respect of their own human rights should not fail as an individual or as a race to fail to show respect for human rights in their own lives too. During war the rights of the individuals or community for personal safety and integrity and personal property and individual endeavours should be respected. During liberation struggle if individual rights are suppressed after political liberation, the oppressed surely will be unliberated in many other human dimensions. Only when this is done, the political liberation can be instrumental in achieving an integrated spiritual liberation of the people involved.

Rev. Fr. R. Stalin

# Religions and Their Contribution for Peace

Sri Lanka is a multi-racial, multi-cultural and multi-religiouns Due to its natural location it had to undergo many colonizations under the Western Nations in the past.

When an individuals basic rights are violated it is natural that there follows chaos and problems. This gradually leads to war. The major religions of Sri Lanka did their best to bring about peace, but it is not enough. We cannot deny the fact that there are some sections of certain religions that contribute to the ethnic problem

The notion of peace cannot be defined. It has a wide meaning. Opinions vary from person to person. No one gives a satisfactory definition for "religion" Since it is connected with the Super Natural it is difficult to define a religion.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Christianity speaks of peace in the old Testament as well as in the New Testament. Both use the term 'Shalom' to denote peace. Buddhism is very much concerned about this aspect of life. Buddha himself avoids war and killing. Once he said that a soldier who dies at a fight will go to hell. It is a belief prevailing among the buddhists that a soldier who dies at a war either goes to hell or will be reborn as an animal. Hinduism does not speak of external peace. It speaks of internal peace. It is concerned with peace that is between a person and his It man and between a person and nature.

In practice the religions of our country played a big role to stop this war and to proceed to peace talks. But it is not enough. All the religions should work more for peace. It is the yearning of our people. Religions, having concern for the aspiration of our people should be more sensitive and work hard to bring about true, just and permanent peace in this land.

Bro. F. T. Judethas

# Laity and the Mission of Reconciliation in the Society - An Interview

Man is created not to live alone but to live in a community. Man's social nature makes it evident that the progress of the human person and the advance of society itself hinge on one another. A few lay people are interviewed to find out how the laity is engaged in the mission of reconciliation in the societly. Here are some points what they expressed.

There are various conflicts and divisions in the present societies due to the differences in the social status, economy, education, religion and other modern cultural intrusions. They affect the growth of the individual and of the whole society. christ came into this world to reconcile us withGod and with one another. It is the duty and the vocation of every Christian to bring about reconciliation in the divided society.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Impact of War on Children

Because of their dependence on others for their life and development, children are vulnerable . Their vulnerability is aggravated in places and times ravaged by war.

The inevitable displacement from one's normal habitat has peculiar adverse effects on children.The sense of loss of home and property and the feeling of uprootedness from the security of familiar environment result in the feeling of insecurity.

The lack of adequate food and medical facilities in places of relocation result in malnutrition and high death rates caused by deseases like diarrhoea and malaria.

Girls are particularly vulnerable. They are subjected to sexual violence and exploitation.

As the religious structures, as well as other structures which meaning to the child's life are destroyed, the child's well rounded development gets stunted.

All in all, every single right enshrined in the convention on the Rights of the Child stands violated by war, and the child is deprived of the experience of "childhood"

Education, which forms the prime concern of parents for their children, suffers major setbacks.

Fr. A.I. Bernard



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் கருத்து

'அழைப்பும் அர்ப்பண வாழ்வும்' இறையியல் கோலங்கள் படித்தேன். அனைத்தும் மிக நன்றாக அமைந்தன. "மூன்றாம் மிலேனியத்தில் இறை அர்ப்பணத்தில் ஏற்படும் சவால்கள்" என்ற ஆக்கம் மிகவும் பயனுள்ள ஒன்று என நினைக்கின்றேன். அவ் ஆக்கத்தினை எழுதிய அருட்திரு சி.றெக்ஸ் கொன்ஸ்ரன்ரைன் CMF அடிகளுக்கு எனது நன்றிகள்.

குழுவில் ஏற்படும் விரிசல்கள் உறவின் பலத்தைச் சிதறடிக்கின்றது. குழுவில் காக்கப்படவேண்டிய இரகசியம் கசியும் போது உறவு உருக்குலைகின்றது. அருட்தந்தையின் இத் தத்துவ அறிவுரைகள் அவரின் ஆக்கத்திற்கு அழகு சேர்ப்பது மட்டுமல்ல எம்மை நாமே சீர்தூக்கிப் பார்க்கவும், சிந்திக்கவும் வழி சமைக்கின்றது.

"இயேசுவோடு இருத்தல் என்பது சவால்" இந்த வார்த்தை எவ்வளவு உண்மையானது, ஆழமானது. எனவே கிறிஸ்துவுக்குள் எங்கள் வாழ்வு இரண்டறக்கலந்திட வேண்டுமானால் அனைத்து சவால்களுக்கும் நாம் முகம் கொடுத்தே ஆகவேண்டும்.

செல்வி. J.டெனி.
உருத்திரபுரம், கிளிநொச்சி.

**சஞ்சிகையின் புதியஆசிரியராகவும் குருமடத்தின் அதிபராகவும் பொறுப்பேற்றுள்ள அருட்தந்தை S. V. B. மங்களராஜா அடிகளாரை மனமார வாழ்த்தி நிற்கின்றோம். அத்தோடு இணை ஆசிரியராக எம்மோடு இணைந்துள்ள அருள்தந்தை பி. கிறிஸ்நாயகம் அடிகளாரையும் அன்போடு வரவேற்கிறோம்.**

அடுத்து வெளிவர இருப்பது
"குடும்பமும் ஒழுக்கவியலும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**வாசகர்களே!**

கிறிஸ்து இயேசுவின்
உயிர்ப்பு நாம் விரும்பும் அமைதியை
எம் உள்ளங்களிலும்
நாட்டிலும் பிறப்பிக்க ஆசிப்பதோடு
ஈஸ்ரர் நல் வாழ்த்துக்களையும்
தெரிவித்துக் கொள்கிறோம்

ஆசிரியர் குழு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி - இல.9 முடிவுகள்

## விடைகள்

**இடமிருந்து வலம்**

1. ஒப்புரவு
5. சனி
6. உறைபனி
8. கேடு
9. பால்

**மேலிருந்து கீழ்**

1. ஒப்பிடுவர்
2. புனித பவுல்.
3. பாப்பரசர்
4. நிறைவாழ்வு
5. சக்கேயு
7. உரிமைகள்

**சரியான விடைகள் எழுதி பரிசுபெறும் அதிஷ்டசாலிகள்**

**1ம் பரிசு :** A. P. றெமிக்கா, சென் தோமஸ் லேன், பருத்தித்துறை.

**2ம் பரிசு :** பா. ஹெலன் யூடிற்றா, சென் ஜேம்ஸ் வீதி, இளவாலை.

**3ம் பரிசு :** யூடித் பபினா செல்வராஜா, சென் ஜேம்ஸ் வீதி, இளவாலை.

**சரியான விடை எழுதி பாராட்டுப் பெறுவோர்**

**ஆ.இரதீசா, கரவெட்டி; திருமாறன், பருத்தித்துறை; A.சியாமளா, பருத்தித்துறை; ஜென்சி ராஜிகா, இளவாலை; ஆ.திருச்செல்வம், யாழ்ப்பாணம்; சி.கொலின்ஸ், சில்லாலை; பீ. மரியநாயகம், யாழ்ப்பாணம்;**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி - இல.10

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | | | 3 | 4 |
| | 5 | | | | |
| ■ | | ■ | 6 | | |
| 7 | | | | | |
| 8 | | | | | |
| | | | 9 | | |

## இடமிருந்து வலம்

1. விவிலியம் குறிப்பிடும் அழைத்தல்கள் மனித வரலாற்றில் பெரும் இவைகளாக திகழ்கின்றன (6)
5. நற்செய்தியாளர்களில் ஒருவர் (3)
6. இந்தியாவிலுள்ள போட்டோ ஆச்சிரமத்தை இந்த ஆச்சிரமம் என்று அழைப்பார்கள். (3) (வலமிருந்து இடமாயுள்ளது)
7. மனிதனை ஆணும் பெண்ணுமாக படைத்தவர். (4)
8. மகன் வலமிருந்து இடமாயுள்ளான். (4)
9. ஆவியின் செயற்பாட்டிற்கு இது ஒரு தடையல்ல (4) (வலமிருந்து இடமாயுள்ளது)

## மேலிருந்து கீழ்

1. இயேசுவின் முதல் புதுமையோடு தொடர்புடைய சொல் (2)
2. இலக்கியங்களும் இந்த சிந்தனைகளும் பெண்மையின் சிறப்புக்களை போற்றி புகழ்கின்றன. (6) (குழம்பியுள்ளது)
3. 2000 களை நோக்கி துறவறம் எனும் நூலை எழுதியவரின் ஊர் (5)
4. இறை ஆட்சியை நிறுவிய இயேசுவின் இவைகள் அதன் நிறைவுக்காக தொடரப்படவேண்டியவை (6) (கீழிருந்து மேலாயுள்ளது)
7. மரியாளோடு முப்பொழுதும் இணைந்திருக்கும் சொல் (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அனுப்புபவரின் பெயர்** :

................................................................................................................

**விலாசம்** :

................................................................................................................

................................................................................................................

................................................................................................................

- விடைகளில் சில டிசம்பர் 2002 இதழில் உள்ளன.
- விடை எத்தனை எழுத்துக்களால் ஆனது என்பதை அடைப்புக்குறிக்குள் உள்ள எண் குறிக்கும்.
- மேலுள்ள கூப்பனை மட்டுமே பயன்படுத்தவும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய இறுதிநாள் மேமாதம் 15, 2003

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

முகவரி : **குறுக்கெழுத்துப்போட்டி - இல 10**
**இறையியல் கோலங்கள்**
**புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி**
**கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசக நேயர்களே!

- உங்கள் விமர்சனங்கள் எங்கே
- உங்கள் நண்பர்களுக்கு இறையியல் கோலங்களை அறிமுகப்படுத்தி விட்டீர்களா?
- இச் சஞ்சிகைக்கு ஆலோசகர்களாக முகவர்களாக பணியாற்ற விரும்புகின்றீர்களா?

உங்கள் தொடர்பிற்கு


கடிதத்தில்:

"இறையியல் கோலங்கள்"

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,

கொழும்புத்துறை,

யாழ்ப்பாணம்.

தொலைபேசியில்:

021-2222482



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் கோலங்கள்

தமிழ் இறையியல் காலாண்டு இதழ்
ஆண்டு சந்தா உள்நாடு (அஞ்சல் செலவு உட்பட) ரூபா 80/-
வெளிநாடு (அஞ்சல் செலவு உட்பட) 5 U.S. $

தனிப் பிரதி 25/=

தொடர்புகொள்க :-
"இறையியல் கோலங்கள்"
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021- 2222482

# IRAI IYAL KOLANGAL

A Tamil Theological Quarterly
Annual subscription : Local (incl. postage )Rs. 80/-
Foreign (incl. postage) 5 U.S. $
Single copy Rs. 25/-

Subscription and correspondence to:

Irai Iyal Kolangal
St. Francis Xavier's Seminary,
Columbuthurai,
Jaffna,
Sri Lanka.
Tel. No. 021-2222482

புனிதவளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம், இலங்கை 2003, தொலைபேசி :-021-2378

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org